
விலை ரூபா: 8.00 Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 20 வெள்ளிக்கிழமை (04.03.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 75




## ஜே.வி.பியினரின் நடவடிக்கையால் திருமலையில் நேற்று பெரும் வன்முறை

### வாகனம் எரிப்பு: பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

(திருகோணமலை)

திருகோணமலை நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள வைத்தீஸன் விளையாட்டரங்கின் பின்புறமாக உள்ள நகராட்சி மன்றத்துக்கு சொந்தமான காணியில் சிங்கள மக்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுக்கும் ஜே.வி.பியின் நடவடிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்றுத் திருகோணமலை நகரின் பிரதான வீதிகள் எங்கும் வீதிமறியல் போராட்டங்கள் இடம்பெற்றுள்ளன.

விளையாட்டரங்குகள் சகல மக்களுக்கும் பொதுவான இடமாகும். இந்தப் பகுதியில் வீடுகளை அமைப்பது பல்வேறு வழிகளிலும் தீங்கு விளைவிப்பதாகவே அமையும் எனவும் மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த வீதிமறியல் போராட்டத்தின் விளைவாக நகரில் வாகனப் போக்குவரத்து பெருமளவில் ஸ்தம்பிதமடைந்திருந்தது. நண்பகலுக்கு பின்னர் தோன்றிய பதற்ற நிலையின் விளைவாக அரச திணைக்களங்கள் பலவும் இழுத்து மூடப்பட்டதுடன் வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருந்தன.

பிரதான வீதியின் ஊடாகச் சென்ற வான் ஒன்றும் தீவைத்து எரிக்கப்பட்டது. இதேவேளை வீடுகளை அமைக்கும் நடவடிக்கையினை தடுத்து நிறுத்துமாறு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான இரா. சம்பந்தன், துரைரட்ணசிங்கம் ஆகியோர் பொலிஸ்மா அதிபர், கிழக்குப் பிராந்திய பொலிஸ்மா அதிபர், மாவட்ட அரச அதிபர் ஆகியோருடன் தொடர்பு கொண்டு (12 ஆம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தான் விமானப்படை தளபதி இலங்கை வருகிறார்

(கொழும்பு)

பாகிஸ்தான் விமானப்படைத் தளபதி எயார் சீவ் மார்ஷல் கலீம் சதாத் மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு எதிர்வரும் 8 ஆம் திகதி இலங்கை வருகிறார்.

இலங்கை விமானப்படைத் தளபதி டொனால்ட் பெரேராவின் அழைப்பின் பேரில் இலங்கை வரும் அவருடன் அந்நாட்டு விமானப்படை அதிகாரிகள் மூவரும் வரவுள்ளனர்.

இலங்கை வரும் அக் குழுவினர் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் முப்படைத் தளபதிகள் ஆகியோரைச் சந்தித்து பேச்சு நடத்தவுள்ளனர்.

கண்டி தலதா மாளிகைக்கும் அவர்கள் செல்லவுள்ளனர். (ச)

# மீள்குடியமர்வை அனுமதிக்காவிடில் வீதியில் இறங்கிப் போராடுவோம்!

## வலி. வடக்கு கடற்றொழிலாளர் சமாசம் எச்சரிக்கை

(திருநெல்வேலி)

**வலிகாமம் வடக்குப் பகுதி மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர்பாக 15 நாட்களுக்குள் சாதகமான முடிவு தரப்படாவிட்டால் அரசிற்கு எதிராக வீதியில் இறங்கிப் போராட வலிகாமம் வடக்கு கடற்றொழிலாளர் சமாசம் தீர்மானித்துள்ளது.**

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. உறுப்பினர் சுட்டுக் கொலை

(கொழும்பு)

கொழும்பு மாநகர சபையின் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் ஏனஸ் பீரிஸ் நேற்று சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

நேற்றுக் காலை 10.20 மணியளவில் கொம்பனித் தெருவில் வைத்து அவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். முச்சக்கர வண்டியில் வந்தவர்களே இவரைச் சுட்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளதாக கொம்பனித் தெரு பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் இவரது மகளின் திருமண வீட்டிற்கு பாதாள உலகக் கோஷ்டியின் முக்கிய புள்ளிகளில் ஒருவரான அஜித்கான் சென்றபோது கைதுசெய்யப்பட்டார்.

கைதுசெய்யப்பட்ட அஜித்கான் பொலிசாரின் பாதுகாப்பிலிருந்து தப்பிச்செல்ல முற்பட்டபோது சுட்டுக்கொலை செய்யப்பட்டிருந்தார். இதன் எதிரொலியாகவே இக் கொலைச் சம்பவம் நடைபெற்றிருக்கலாம் என கருதப்படுகிறது. (த-04)

## விமான நிலையத்தில் இருந்த நிவாரணப் பொருட்கள் மாயம்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென மலேசியாவிலிருந்து அனுப்பிவைக்கப்பட்ட நிவாரணப் பொருட்களில் அரைவாசி காணவில்லை என்று அமெரிக்காவைச் சேர்ந்த தொண்டு அமைப்பு முறைப்பாடு செய்துள்ளது.

கடந்த ஜனவரி 17 ஆம் திகதி கொண்டுவரப்பட்ட இந்த நிவாரணப் பொருட்கள் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைக்கப்பட்டதாகவும், அவற்றில் சுமார் 58 வீதமான பொருட்களை காணவில்லை என்றும் அந்த தொண்டு அமைப்பு இலங்கை நலன்புரி அமைச்சிடம் முறையிட்டுள்ளது.

நிவாரணப் பொருட்களை அகற்றுவதாகக்கூறி உதவி அமைப்பினர் அதனை அகற்றிச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## வீட்டில் கைக்குண்டுகள் குடும்பஸ்தர் கைது

அம்பாறை மாவட்டம் தம்பிலுவிலில் உள்ள வீடு ஒன்றில் கைக்குண்டுகளை மறைத்து வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அப் பிரதேசவாசி ஒருவர் நேற்றுக் காலை பொலிசாரால் கைது செய்யப்பட்டார். தமக்குக் கிடைத்த தகவலொன்றின் பேரில் சந்தேக நபரான அ. மோகனதாஸ் என்பவரது வீட்டைச் சோதனையிட்டதாகவும் அங்கு ரஷ்ய தயாரிப்பான கைக்குண்டு ஒன்று, ஜே.ஆர். ரக கைக்குண்டு ஒன்று என இரண்டு கைக்குண்டுகளை தாம் கைப்பற்றியுள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.

ஆழிப்பேரலையின்போது கடல் நீரினால் அள்ளுண்டு வந்த கைக்குண்டுகளே இவை என கைதான நபர் பொலிசாரிடம் கூறியுள்ளார்.

சந்தேக நபர் தற்போது விசாரணைக்காக தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகவும் நீதிமன்ற உத்தரவைப்பெற்று அவர் விளக்கமறியலில் வைக்கப்படுவார் என்றும் பொலிசார் தெரிவித்தனர். (ச)

## சுனாமி தாக்கிய குடும்பஸ்தர் 66 நாட்களின் பின் மரணம்

சுனாமி அனர்த்தத்தில் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த குடும்பஸ்தர் ஒருவர் 66 நாட்களின் பின்னர் நேற்று முன்தினம் இரவு மரணமானார்.

தாளையடியைச் சேர்ந்த மகாலிங்கம் இரட்ணசிங்கம் (வயது 53) என்பவரே மரணமானவராவார்.

கடந்த டிசம்பர் மாதம் 26 ஆம் திகதி ஏற்பட்ட சுனாமித் தாக்கத்தினால் பாதிக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்றுவந்த அவர் சிகிச்சை பலனளிக்காத நிலையில் நேற்று முன்தினம் இரவு 8.15 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் மரணமானார்.(ச-19)

## திருகோணமலையில் இன்று ஹர்த்தால்

(திருகோணமலை)

திருகோணமலையில் இன்று பூரண ஹர்த்தால் மற்றும் கடையடைப்பும் நடைபெறவுள்ளது.

நேற்று ஜே.வி.பியினால் மேற்கொள்ளப்பட்ட சட்டவிரோத குடியேற்றத்தை ஆட்சேபித்தே இக் ஹர்த்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் பேரவை இது தொடர்பாக வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில், அரசாங்க அதிபர் இவ்வாறான சட்டவிரோத குடியேற்றத்திற்கு அனுமதியளிப்பதில்லை என உறுதியளிக்கும் கடிதம் ஒன்றினை வழங்கும் வரையில் தமது ஹர்த்தால் போராட்டம் தொடரும் என

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மறியல் போராட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரிலுள்ள இரு பிரதான பாடசாலை மாணவர்கள் மண்முனை வடக்குப் பிரதேச செயலகம் முன்பாக நேற்று மறியல் போராட்டம் நடத்தினர். இதனால் நண்பகல் வரை செயலகத்தின் வழமை நிலை முற்றாக தடைப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரி மற்றும் இந்துக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் மாணவர்கள் இப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்ச்செல்வனின் மலையக விஜயத்திற்கு எதிர்ப்பு என்பது அப்பட்டமான பொய்

### அவரின் வருகை பெருமை தரும் என்கிறார் முத்துசிவலிங்கம்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனின் மலையக விஜயத்தை இலங்கைக் தொழிலாளர் காங்கிரஸ் எதிர்ப்பதாக வெளியான செய்தியில் எந்தவிதமான உண்மையும் இல்லையென இ.தொ.கவின் நிதிச் செயலாளரும் அமைச்சருமான முத்துசிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரின் மலையக விஜயம் தொடர்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கூடுதல் கவனம் எடுக்கவேண்டும் என இ.தொ.கவின் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் முயற்சியால் பலர் ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ளனர்

## ஐ.தே.கவை விட பலமடங்கு சாதித்து விட்டோம் என்கிறார் ஜனாதிபதி

(மகரகம)

**அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்த பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தமது கட்சியை மறந்துள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

**இந்த சந்தர்ப்பத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த அநேகர் அரசாங்கத்தைப் பற்றி மாத்திரம் கவனம் செலுத்தியுள்ளதாக அவர் தெரிவித்தார்.**



நேற்று முன்தினம் மாலை மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதிகாரத்துக்கு வந்த பாதையினைக் கட்சியினர் மறந்து விடுகின்றனர். அரசாங்கத்தை நடத்துவது பற்றி மாத்திரமே அவர்கள் சித்தித்து வருகின்றார்கள். அரசாங்கத்தைக் கொண்டு செல்பவர்கள் மாகாண சபையில் இருப்பவர்கள் அனைவருமே இதில் அடங்குகின்றனர்.

இந்த நிலையில் இருந்து அவர்கள் மாறவேண்டும். இதனை மற்றவர்கள் அறிந்துள்ளனர். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அதிகாரத்துக்கு வர உதவிய பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தூங்கிக் கொண்டிருக்கும் பலசாலியைப் போன்றது என்றே நான் காணுகின்றேன். அது மிகவும் பலமுள்ளது. ஆனால் அது அதிகாரத்துக்கு வந்த பின்னர் தூங்குகின்றது.

இக்கட்சி உறுப்பினர்கள் தூங்குகின்றனர் அல்லது களவெடுக்கின்றனர். இரண்டில் ஒன்று அல்லது இரண்டையுமே இவர்கள் செய்கின்றனர். எங்களுடன் வேறுவேறு நபர்கள் உள்ளே வந்து சேரும் போது தூங்கிக்கொண்டிருக்கும் பலசாலியின் தொப்பியை மெதுவாகக் கழற்றுகின்றனர்.

பின்னர் ரையைக் கழற்றுகின்றனர். பின்னர் சேட்டை, காற்சட்டை என எல்லாவற்றையும் கழற்றிச் செல்கின்றனர். பிறகு கையைக் காலை அகற்றுகின்றனர். அத்துடன் அந்தப் பலசாலி இறந்து விடுகின்றான்.

இவ்வாறான குறைபாடுகளுக்கெல்லாம் நாமே பொறுப்பாளிகள், நாமே குற்றவாளிகள்.

எவ்வாறு இருந்தாலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை எவராவதும் உடைக்க, தகர்க்க நினைத்தால் அது இயலாத காரியமாகும். அதற்காக எவரும் கஷ்டப்படத் தேவையில்லை. இதற்காக செலவழிக்கின்ற நேரத்தினை வேறு எதற்காவது பயன்படுத்தினால் குறிப்பாக நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தினால் நாடு அவர்களினால் முன்னேற்றமடைந்தது என்ற வரலாறாவது நிலைத்து நிற்கும்.

எமதும், எமது கட்சியின் பலமும் எமக்குத்தான் தெரியும். எம்மோடு சீண்டும் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அதற்கான பின்விளைவுகளை அவர்களே தேடிக்கொள்ள வேண்டி ஏற்படும்.

வடக்கு-கிழக்கில் யுத்தத்தின் மூலமே பிரச்சினையைத் தீர்க்க முடியும் என நினைத்தவர்கள் இன்று ஜனநாயகத்துக்கு திரும்பியுள்ளமை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வெற்றியாகும். எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினால் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மட்டும் தான் செய்யமுடிந்தது ஆனால் நாங்கள் அதனைத் தொடர்ந்து பேணிக் காப்பதோடு பலரை ஜனநாயக வழிக்கு கொண்டு வந்திருக்கின்றோம்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தின் பின்னர் நிவாரண நடவடிக்கைகளில் அரசாங்க அதிகாரிகள் உரிய முறையில் செயற்படவில்லை.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஏனைய கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட்டு வருகின்றார்கள். அத்துடன், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான, அதேவேளை தமிழ்மக்களுக்காகப் போராடிய கட்சிகளும் ஒத்துழைக்கின்றனர்.

ஐக்கிய தேசியக்கட்சி ஒரு போதும் மக்கள் சார்பில் திட்டங்களை முன்வைத்ததில்லை. ஆட்சிக்கு வந்த போதெல்லாம் சிங்கள மொழிக்காக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியே பாடுபட்டது எனத் தெரிவித்தார்.

அரசாங்கத்தில் உள்ள அரசியல்வாதிகளில் 90 சதவீதமானோர் ஊழல்களுடன் செயற்படுகின்றனர். 10 சதவீதமானோரே உரியமுறையில் மக்களுக்கு சேவையாற்றி வருகின்றனர்.

ஆசிய அபிவிருத்த வங்கி, உலகவங்கி என்பன 16 ஆயிரம் கோடி ரூபாவினை வழங்கவுள்ளன. அவை சுனாமி அனர்த்தத்தின் பின்னர் நாட்டைப் புனரமைப்பதற்காக செலவிடப்படவுள்ளன. இந்த நிலையில் கடற்கரையில் இருந்து 100 மீற்றர் தூரத்தில் கட்டடங்களை அமைப்பது தொடர்பான அரசாங்கத்தின் திட்டத்தில் மாற்றங்கள் எதுவும் இல்லை என ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். (ப-4)

# இராசி பலன்

**04.03.2005**
**மாசி 20, வெள்ளிக்கிழமை**
**அட்டமி முற்பகல் 07.06 மணிவரை**
**நவமி பின்னிரவு 4.57 மணிவரை**
**கேட்டை பிற்பகல் 2.25 மணிவரை**
**இராகுகாலம் 10.56 - 12.26 மணிவரை**
**சுபநேரம் 6.26 - 7.56 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | புதிய திட்டமிடல், பிதாசிந்தை, காரிய தாமதம், பிரயாணம். |
| இடபம் | பிரயாண பயம், காரிய தடங்கல், ஆரோக்கியக் குறைவு, நண்பர்கள் விரோதம். |
| மிதுனம் | தெய்வசிந்தை, குடும்பநலம், காரிய சித்தி, போசன சுகம். |
| கடகம் | சுவாரஸ்யம், நல்லமுயற்சி, உறவினர் உதவி, போசன நன்மை. |
| சிங்கம் | தாழ்ந்த சுபாவம், சிறுவியாதி, முயற்சி தாமதம், அமைதிக் குறைவு. |
| கன்னி | உடல்நலக்குறைவு, வீண் பயம், காரிய தாமதம், வேலைச்சுமை. |
| துலாம் | புதிய முயற்சி, சகோதரர் வழிநன்மை, விருந்துபசாரம், நல்ல செய்தி. |
| விருச்சிகம் | உணர்ச்சி வசப்படுதல், முயற்சி தாமதம், மாதர் நட்பு, அதிகசெலவு. |
| தனுசு | தேகநலன், தெய்வ தரிசனம், போசன சுகம், நல்லமுயற்சி. |
| மகரம் | இடமாற்றம், உறவினர் மனஸ்தாபம், சயனசுகக் குறைவு, முயற்சிதாமதம். |
| கும்பம் | சுபநிகழ்வு, தொழில் விருத்தி, பொருள் விரயம், குடும்ப மகிழ்ச்சி. |
| மீனம் | நல்ல செய்தி, அதிகபிரயாசை, புதிய திருப்பம், காரிய அனுகூலம். |

**பழைய நேரப்படிகணிப்பிடப்பட்டது**

**-வளவன்**

### சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கான இடைத்தங்கல் முகாம்களில்

## அடிப்படை வசதிகளை ஏற்படுத்துவதில் பாதிக்கப்பட்டவர்களின் பங்களிப்பில்லை

(தென்மராட்சி)

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் சுனாமிப் பேரலையினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான தற்காலிக இடைத்தங்கல் முகாம்களில் வீடுகள், கிணறுகள் மற்றும் மலசலகூடங்கள் அமைக்கும் பணிகளில், பாதிக்கப்பட்ட குடும்பங்களின் பங்களிப்புகள் இல்லாமல் இருப்பதாகத் தெரியவந்துள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள பதினெட்டு கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் இடைத்தங்கல் முகாம்கள் அமைக்கும் பணியில் ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புகள், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் தற்போது ஈடுபட்டுள்ளன.

இம் முகாம்களில் அரை நிரந்தர வீடுகள் மலசலகூடம் மற்றும் கிணறுகளை அமைப்பதில் மேற்படி நிறுவனங்களின் பணியாளர்கள் தீவிரமாக ஈடுபட்டுவரும் வேளையில், அவற்றைப் பயன்படுத்துபவர்கள் எத்தகைய பங்களிப்புகளும் வழங்காமல் இருப்பதால், திட்டமிட்ட பிரகாரம் உரியகால எல்லைக்குள் குறித்த நிர்மாணப் பணிகளைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையே காணப்படுவதாகக் கூறப்படுகின்றது.

சுனாமியினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான இடைத்தங்கல் முகாம்களை அமைக்கும் பணியில் யு.என்.எச்.சீ.ஆர்., கியூடெக், சிறுவர் பாதுகாப்பு நிறுவனம், வெண்புறா, சர்வோதயம், அறவழிப் போராட்டக்குழு, லீட்ஸ், உலக தரிசனம், யூனிசெப், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் உள்ளிட்ட அமைப்புகள் தற்போது ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. (ப-16)

## முதலீட்டாளர்களின் நெருக்கடிகளைக் குறைக்க அநுரா தலைமையில் விசேட குழு நியமனம்

(கொழும்பு)

திட்டங்களை ஆரம்பிக்கும் போது முதலீட்டாளர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதற்கு ஜனாதிபதி உயர்மட்டக் குழுவொன்றையும் நியமித்திருக்கின்றார்.

அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க இக் குழுவின் தலைவராகச் செயற்படுவார். முதலீட்டுத் திட்டங்களை ஆரம்பிப்பதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதில் அரச நிறுவனங்கள் ஆற்ற வேண்டிய பணிகள் குறித்து இந்தக் குழு கூடிய கவனம் செலுத்தும்.

காணிகளைப் பெற்றுக் கொள்ளுவது உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது உட்பட திட்டங்களைத் துரிதமாக அங்கீகரிப்பது போன்ற விடயங்களைக் கையாளும் பொறுப்பும் இக் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ற-9)

## வைத்திய தம்பதியர் சாவகச்சேரியில் சேவை

(தென்மராட்சி)

கனடாவில் இருந்து வருகை தந்துள்ள நரம்பியல் கிசிச்சை நிபுணர்களான டாக்டர் முகுந்தனும் அவரது துணைவியாரும் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் நூற்றுக்கணக்கான நோயாளர்களுக்கு நரம்பியல் தொடர்பான சிகிச்சைகளை இலவசமாக வழங்கியுள்ளனர்.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலையின் பொறுப்பதிகாரி டாக்டர் எஸ்.மயிலேறும்பெருமாளின் ஏற்பாட்டில், சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையின் அனுசரணையுடன் இவ் வைத்திய நிபுணர்கள் தமது மருத்துவ நிபுணத்துவ சேவையை வழங்கியிருந்தனர்.

இதேசமயம், சாவகச்சேரியில் இடம்பெற்ற வைத்தியசேவையில் நரம்பியல் சத்திரசிகிச்சைக்கு இனங்காணப்பட்ட சுமார் 25 நோயாளிகளுக்கு இன்று (வெள்ளி) முதல் மந்திகை ஆதார வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை நிலையத்தில் வைத்திய நிபுணர் முகுந்தன் சத்திரசிகிச்சைகளை இலவசமாக மேற்கொள்ளவுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ப-16)

## உதவு தொகை வழங்கல்

சுனாமி இயற்கை அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட உயர் கல்வி மாணவர்களுக்காக சர்வதேச மாணவர் பேரவையின் ஆதரவில் டபிள்யு.யூ.எஸ்.சி.நிறுவனமானது ரீடோ நிறுவனத்துடன் இணைந்து தெரிவு செய்யப்பட்ட முதல் ஐம்பது மாணவர்களுக்குரிய உதவிக் கொடுப்பனவை இன்று வெள்ளிக்கிழமை மாலை 3.00 மணியளவில் யாழ்.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே, தெரிவு செய்யப்பட்ட ஐம்பது மாணவர்களையும் இந் நிகழ்வில் கலந்துகொண்டு உதவிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டுவதோடு, இதுவரை பெயர் விபரங்களை உறுதிப்படுத்தாதவர்கள் தங்களது பெயர் விபரங்களை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (ப)

## நிதி ஒதுக்கீடு

வடமராட்சி கிழக்கு மணற்காடு பொற்பதி கிராமங்களை புனரமைக்க ஐக்கிய நாடு ஸ்தாபனம் முன்வந்துள்ளது.

சுனாமிப் பேரலையினால் அழிந்து போன இரு கிராமங்களையும் புனரமைப்பதற்கு 2 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மணற்காடு கிராமத்திற்கு ஒரு மில்லியன் ரூபாவும் பொற்பதி கிராமத்திற்கு ஒரு மில்லியன் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ப-35)

# எமது ஆலோசனைகளுக்கு சாதகமானபதில் கிடைத்தால்

# பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் சாத்தியம் ஏற்படும்

## பி.பி.சி. தமிழோசைக்கு தமிழ்ச்செல்வன் செவ்வி

(கொழும்பு)

சுனாமி நிவாரணப் பொதுக்



கட்டமைப்பு ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பான நடவடிக்கைகளில் ஒருபக்கமாக தமிழீழ விடுதலைப் புலிகள் நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக தீவிரமாக ஈடுபட்டுவருகின்றனர்.

இதேவேளையில், இந்த சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற எங்களுடைய முக்கிய பொறுப்பினர்கள் மீது இலக்குவைத்து கிழக்கு மாகாணத்தில் படைத்தரப்பின் ஆதரவோடு தாக்குதல் முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்றபோது இப்படியான எமது முயற்சிகளைக் கூட அது பலவீனப்படுத்துகின்ற நிலைமைதான் தற்போது உருவாகியிருக்கின்றது என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

பி.பி.சி.தமிழோசைக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

நாங்கள் ஏற்கனவே எங்கள் நிலைப்பாடுகளை, யோசனைகளை நோர்வே அனுசரணையாளர்கள் ஊடாக இலங்கை அரசுக்குத் தெளிவுபடுத்தியிருக்கின்றோம்.

அண்மையிலும் நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவரும் நோர்வேத் தூதுவரும் இங்கு வருகைதந்தபோது எங்களுடைய தெட்டத்தெளிவான நிலைப்பாட்டை அரசுக்குத் தெரிவிக்குமாறு கூறியிருந்தோம்.

எதிர்வரும் நாட்களுக்குள் நோர்வேத் தூதுவர் மீண்டும் எங்களோடு வந்து பேசுவதாக அறிவித்திருக்கின்றார். ஆகவே இது சம்பந்தமாக நாங்கள் எடுத்த இந்த ஆலோசனைகளுக்குச் சாதகமான பதில்கள் கிடைக்குமாக இருந்தால் நிச்சயமாக பொதுக்கட்டமைப்பினை உருவாக்குவதற்கான சாத்தியப்பாடுகள் நிறைய உருவாகும் என நாங்கள் நம்புகின்றோம்.

நாங்கள் இலங்கை அரசோடு எங்களுடைய தாயகப் பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களினுடைய பிரதிநிதித்துவத்தை சரியான முறையில் பாதிப்பின் அடிப்படையில் வழங்கி அவர்கள் அந்தக் கட்டமைப்புக் கூடாக இந்த மக்களுக்கான மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ளலாம்.

புனர்நிர்மாணப்பணிகள், மீள் கட்டுமானப்பணிகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதுதான் எங்களுடைய நிலைப்பாடு. அதைத்தான் நாங்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ர-4)

## கரவெட்டியில் 5 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன

கரவெட்டி பிரதேச சைபயின் எல்லைக்குட்பட்ட அல்வாய் மாயக்கை வீதி, கரவெட்டி சண்டில்குளம் வீதி, கட்டைவேலி அனிஞ்சிலடி வீதி, துன்னாலை காளிகோவில் வீதி, உடுப்பிட்டி வாகையடி துவாளை வீதி ஆகிய ஐந்து வீதிகள் திருத்தப்படவுள்ளன.

மேற்படி ஐந்து வீதிகளும் சுமார் 50வருடங்களுக்கு மேலாக கவனிப்பாரற்று இருந்தவேளை மேற்படி பகுதி மக்களின் வேண்டுகோளை ஏற்று அண்மையில் புதிதாகப் பொறுப்பேற்ற வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபைச் செயலாளர் வே.குலநாயகம் உடன் நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேபோல சாமியன் அரசடிப் பகுதியில் அமைந்துள்ள 75 வருடங்களுக்கு மேலாக திருத்தஞ்செய்யப் படாதுள்ள புதுத்தோட்ட வீதியையும் திருத்தியமைக்க ஆவன செய்யுமாறு அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ப-101)

## க.பொ.த (சா/த) பரீட்சைக்கு முன் கணித பாடத்தில் முன்னோடிப் பரீட்சை

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரணதர பரீட்சை நடைபெறுவதற்கு முன்னர் கணித பாடத்தில் பரீட்சை ஒன்றை நடாத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

கணித பாடத்தினூடாக மாணவர்களின் அறிவு, எண்ணக்கருக்கள், நிபுணத்துவம் மற்றும் ஆற்றலை மேம்படுத்துவதற்கு கல்வியமைச்சு மேற்கொண்டுள்ள திட்டத்தின் ஒரு படியாகவே இந்தப் பரீட்சை நடாத்தப்படவுள்ளது.

ஏனைய பாடங்களை இலகுவில் புரிந்துகொள்வதற்கும் தர்க்க ரீதியிலான எண்ணக்கருவுடன் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் இக் கணித பாடப் பரீட்சை உதவியாக இருக்கும் என அமைச்சு நேற்று முன்தினம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும், கல்வியமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது கணித பாடத்தைப் பெருமளவிலான மாணவர்கள் விரும்புவதில்லை எனத் தெரியவந்துள்ளது.


கடந்த வருடம் நடைபெற்ற சாதாரணதரப் பரீட்சை முடிவுகளின்படி 40வீதமான மாணவர்களே கணித பாடத்தில் சித்தியடைந்துள்ளனர்.

இதனால் மாணவர்கள் விரும்பக்கூடிய வகையிலான நுட்பங்களைக் கையாண்டு கணிதபாடத்தைப் போதிக்கத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

இதற்கென ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் திட்டம் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அமைச்சின் அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.(ர-4)

## பூதளக் கடற்தட்டுக்களின் பிறழ்ச்சி!

① ஆறு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் மத்தியதரைக் கடற் பிர



மைய அட்லாண்டிக் பிறழ்ச்சித் தட்டுக் கடற் பீடம் குறுக்கேசெல்லும் ஐஸ்லாந்தில் உள்ள சூர்ட்ஸி தீவு 1963இல் எரிமலை கக்கி புதிதாகத் தோன்றியது.

## பூகோளக் கடற்தளங்களின் நீட்சி!

தேசம். நீரில்லாத இரண்டு மைல் ஆழக்குழியாக உப்புக் கலவைப் பொருள் மிகையாகக் கொண்டிருந்தது. அட்லாண்டிக் கடலை ஜிப்ரால்டர் பெருமலைத்தொடர் மறைத்து, ஒருசில நதிகள் மட்டும் சேரும் மத்தியதரைக் கடல் வெள்ளம் அனைத்தும் ஆவியாகப் போனது. கப்பலின் துளைக்கருவி வெகு ஆழத்தில் தோண்டிப் பார்த்ததில், பல பகுதிகளில் பாலைவன வெப்பத்தில் காய்ந்துபோன ஆயிரக்கணக்கான அடி உயர உப்புக்குளங்களும், ஏரிகளும் காணப்பட்டன."

டாக்டர் வில்லியம் ரயான் (1970) கடற்தளங்கள் நீட்சியைக் கண்டு பிடித்து விளக்குவது நம்கையில் தான் இருக்கிறது. மைய அட்லாண்டிக் பிறழ்ச்சிப் பீடத்தின் இருபுறமும் உள்ள கடற்தளம் ஆண்டுக்கு சுமார் ஓரங்குல நீளம் நகர்ந்து கொண்டு வருகிறது. கடற்துளையில் எடுத்த மாதிகள் வடிகால் புழுதிக்கும், அடிக்கடற் பாறைக்கும் இடையில் உள்ள எல்லையைக் காட்டின.

அத்துடன் அவை எத்துணை இளைய பருவத்தை உடையவை என்று வயதைக்காட்டி அடிக்கடல் பூர்வப்படிவங்கள் வெஜினரின் மகத்தான கண்டங்களின் புலப்பெயர்ச்சி நியதியை மெய்ப்பித்தது.

டாக்டர் ஆர்தர் மார்க்ஸ் வெல் '450 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஆபிரிக்காவில் ஸஹாராப் பாலையின் மீது துருவப் பனிக்கூண்டு படிந்துகிடந்தது. அதை மெய்ப்பிக்க அல்ஜீரிய பாலைவனத்தில் பனிப்பாறை செதுக்கிய கற்பாறைகள் இப்போதும் பிழைத்திருப்பதைக் காணலாம்.

பூர்வ காந்தத்தைச் சோதிக்கும்போது அல்ஜீரியா பகுதி ஒரு காலத்தில் தென்துருவத்தில் பனி மூடிக்கிடந்திருக்க வேண்டும் என்று தெரியவருகிறது. அல்ஜீரிய பகுதி இப்போது பூகோளத்தின் வளைவில் பெயர்ச்சியாகி 8000 மைல் தூரம் வடக்கே நகர்ந்துள்ளது. 250 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு ஆபிரிக்காவின் ஸஹாராப் பாலைவனம் தென்துருவத்தில் இருந்து பனிப்பாறையால் மூடியிருந்த காலத்தில் பூமத்தியரேகை வட அமெரிக்காவின் மத்திய பகுதி வழியாகச்சென்றிருக்க வேண்டும். குளிர்ப் பிரதேசங்களான அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற இடங்களில் நிலக்கரிச் சுரங்கங்கள் அந்த யுகத்தில்தான் தோன்றியிருக்கவேண்டும். டாக்டர் ரோட்ஸ் ∴பேர்பிரிட்ஜ், கொலம்பிய பல்கலைக்கழகம் பிரபஞ்சத்தின் அண்டங்கள், பஞ்சபூதத்தின் அங்கங்கள் உலகத்தில் வாழும் உயிரினங்கள் எல்லாம் சக்தி மயத்தால் முறையே ஓர் ஒழுக்க நியதியைப் பின்பற்றி இயங்கினாலும் அவற்றின் இயகத்திலும் வடிவத்திலும் தொடர்ந்து மாறுபாடுகள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. அந்த வேறுபாடுகளை நோக்கும்போது பிரபஞ்ச நியதிகள் முற்றிலும் சீரானவை என்றோ அல்லது முழுவதும் சீரற்றவை என்றோ அழுத்தமாகச் சொல்லமுடியாது. ஆனால் நமக்குத் தெரிந்த பிரபஞ்சக் கோட்பாடுகளைச் "சீரற்ற ஒழுங்கு நியதிகள்" என்று இரண்டு முரண்பாடுகளையும் இணைத்து நாம் விளக்கம் சொல்லலாம்.


அட்லாண்டிக் பெருங்கடல் மெதுவாக அகன்று வருகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனால் பசுபிக் பெருங்கடல் மெதுவாகக் குறுகிக் கொண்டு வருகிறது. ஐரோப்பாவில் இருக்கும் ஆல்ப்ஸ் மலைத் தொடர் வளர்ச்சியாகி உயரம் அதிக மாகிக் கொண்டே போகிறது. பூதக் கண்டம் ஆபிரிக்கா செங்கடல் வட முனையில் பிளக்கப்போகிறது. இமாலயச் சிகரங்களை இந்தியா வின் கனத்த உபகண்டம் அழுத்தி, அழுத்தி அவற்றின் உயரத்தை மிகையாக்கிய வண்ணமாயிருக்கின்றன. ஹவாமா தீவுகள் வடமேற்குத் திசையில் மெதுவாகப் பெயர்ந்து ஜப்பான் தீவுகளை நோக்கிச் செல்கின்றன.

வட அமெரிக்காவும், ஐரோப்பாவும் எதிர்ப்புறம் மெல்ல மெல்ல நகர்ந்து இடைவெளியை அகலமாக்கி வருகின்றன. அமெரிக்காவில் கலிபோர்னிய கடற்கரையில் உள்ள லாஸ் ஏஞ்சல்ஸ் நகரம் வடபுறமாகச் சரிந்துகொண்டிருக்கிறது.

(தொடரும்)

### உலகப் பிறழ்ச்சித் தட்டுகளின் வயது





# திராவிடக் கட்சிகளின் தமிழ்த் தேசியம்

தமிழ் நாட்டில் சட்டப்பேரவைப் பொதுத் தேர்தல் விரைவில் வரக்கூடும் என்ற ஊகம் இப்போது பலமாக எழுந்துள்ளது. தமிழ்நாட்டு அரசியலில் பலம் வாய்ந்த கட்சிகளான திராவிட முன்னேற்றக் கழகத்துடனோ, அல்லது அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்துடனோ தேர்தல் கூட்டு ஒன்றினை ஏற்படுத்துவதற்கு மற்றைய அரசியல் கட்சிகள் முனைந்துள்ள வேளை இது! இம்முயற்சிகள் பிசகும் பட்சத்தில் மூன்றாவது அணி ஒன்று தோன்றுவதற்கும் வாய்ப்புண்டு.

தேசியக் கட்சிகள் என்று தம்மை வர்ணித்துக் கொள்ளும் காங்கிரஸ் கட்சியும் பாரதீய ஜனதாக்கட்சியும், தமிழ்நாட்டில் திராவிடக் கட்சிகள் ஒன்றோடு கூட்டுச் சேர்வதன் மூலம், தங்கள் இருப்பை அல்லது இருக்கைகளைக் காப்பாற்றிக் கொள்ள முயலும் காட்சிகளையும் இனி நாம் காணக் கூடியதாக இருக்கும்.

தமிழ் நாட்டுக் கட்சிகளின் அரசியல் பலம் குறித்தோ அல்லது அவர்களது வாக்கு வங்கிச் செல்வாக்குக் குறித்தோ இன்றைய தினம் நாம் தர்க்கிக்க முன்வரவில்லை. மாறாக தற்போது தமிழ்நாட்டு அரசியலில் செல்வாக்குள்ள திராவிடக் கட்சிகளின் வரலாற்றையும், அவர்கள் கொண்ட கொள்கைகளில் இருந்து பிறழ்ந்ததால் தமிழ்த் தேசியத்திற்கு ஏற்பட்ட பின்னடைவையும் சிந்திக்கவேண்டும்.

இந்த வகையில் பெரியாரின் திராவிடக் கழகத்தின் அடிப்படைக்கோட்பாடுகளையும், அறிஞர் அண்ணாத்துரையின் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளையும் சற்று ஆழமாகப் பார்ப்பதுடன் பின்னர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைக் கோட்பாடுகள் எவ்வாறு கூர்மையிழந்தன என்பது குறித்து ஆராய்வது பொருத்தமானதாக இருக்கும். இந்தஆய்வின் சிந்தனையூடே நாம் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் போன்ற மற்றைய அரசியல் கட்சிகளின் கொள்கைப் பிறழ்வுகளையும் அடையாளம் காணக் கூடியதாக இருக்கும்.

தமிழகத்தில் வடவர் ஆட்சியும், பார்ப்பனிய மேலாதிக்கமும் கோலோச்சிய வேளையில், திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியற் பிரவேசம் பல மாற்றங்களைக் கொண்டு வந்ததோடு தமிழ் மொழிக்கும் உயர்வு ஏற்பட்டது என்று பரவலாகப பலர் பாராட்டுவதுண்டு. அதேவேளை, அறிஞர் அண்ணாத்துரை மீதும் அவரது திராவிட முன்னேற்றக் கழகம் மீதும் மிகக் கடுமையான விமர்சனங்களை அறிஞர்கள் குணா, அ. மார்க்ஸ் போன்றவர்களும் வெளியிட்டுள்ளார்கள்.

பெரியார் ஈ.வே.ராவின் திராவிடக் கழகத்தை விட்டு வெளியேறி 17-9-1949ல் திராவிட முன்னேற்றக் கழகத்தை அண்ணாத்துரை ஆரம்பித்த பின்பு கழகத்தின் வளர்ச்சிக்கு நாடகத்துறையும், சினிமாத்துறையும் உறுதுணையாக இருந்தன என்பதும் உண்மைதான். அடைநதால் திரா விடநாடு, இல்லையேல் சுடுகாடு என்று முழங்கியவர்களின் கொள்கையும், கோட்பாடுகளும் பிற் காலத்தில் எந்தவிதமாக நீத்துப்போயின என்பதையும் அவற்றை இவர்களது திரைப்பட, ஊடகத் துறைகள் எவ்வாறு வெளிப்படுத்தின என்பதையும் ஏககாலத்தில் நாம் ஆராய்ந்துபார்க்க வேண்டும்.

திராவிட இயக்கத்தைப் பொறுத்தவரையில் அவர்களது தேசிய வரையறை மற்றும் தனி நாட்டுக் கோரிக்கையின் வரலாற்றுப் போக்கை மூன்று காலப்பிரிவுகளாக அறிஞர் அ.மார்க்ஸ் குறிப்பிடுகின்றார்.

முதற்கட்டமாக 1856ம் ஆண்டுக்கும் 1915ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தை மார்க்ஸ் விபரிக்கின்றார். கோல்ட்வெல், போப், பேர்சிவல், எல்லீஸ் முதலிய வெளிநாட்டு அறிஞர்கள் திராவிட மொழிகளின் பொதுமையையும், அதனடியாக வந்த திராவிடப் பண்பாட்டின் தனித்தன்மையையும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து முன்வைக்கத் தொடங்கினார்கள். இதனை அடியொற்றியும் இதற்கு இணையாகவும் சி.வை.தாமோதரம்பிள்ளை, ஆறுமுகநாவலர், பேராசிரியர் சுந்தரம்பிள்ளை, சபாபதிநாவலர், கனகசபைப்பிள்ளை,ஜே.எம்.நல்லசாமிப்பிள்ளை ஆகியோர் சைவத்துடன் தமிழை அடையாளப்படுத்தி, திராவிடக் கருத்தையும் தமிழ்மீட்பு வாதத்தையும உயர்த்திப்பிடித்தனர். யாழ்ப்பாண சைவபரி பாலன சபைசித்தாந்த சமாசம் போன்ற வடிவங்களில் சைவசித்தாந்தம் என்பது தமிழ்மீட்பு வாதத்தின் பிரிக்க முடியாத அங்கமாக்கப்பட்டது.

இரண்டாவது காலகட்டமாக 1916ம் ஆண்டுக்கும் 1937ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலகட் டத்தில்தான் திராவிட இனம் என்பதை ஓர் அரசியல் சமூகமாகக் கட்டமைக்கும் முயற்சிகள் உருவாகின. 1916ம் ஆண்டிலிருந்து 1925ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் பார்ப்பனர்களின் மதசார்பற்ற மேலாண்மையை மட்டும் நீதிக்கட்சியினர் எதிர்க்கத் தொடங்குகின்றார்கள். அதாவது பார்ப்பனர்களின் அரசியல் அதிகாரங்கள், அரச பதவிகளை எதிர்க்கின்ற அதே வேளை, அவர்களது சடங்கு மேலாண்மையை நீதிக்கட்சியினர் எதிர்க்கத் தொடங்கவில்லை. 1925ம் ஆண்டு காங்கிரசை விட்டு விலகிய தந்தை பெரியார், சுய மரியாதை இயக்கத்தைத் தொடங்கி தீவிர பிரசாரங்களை மேற்கொள்கின்றனர். பார்ப்பனர்களின் சடங்கு மேலாண்மையையும், அதனை நியாயப்படுத்துகின்ற இந்து மதத்தையும் பெரியார் கடுமையாக எதிர்க்கத் தொடங்குகின்றார். 1935 தொடங்கி நீதிக்கட்சியோடு நெருக்கமாகின்றார். இந்தி எதிர்ப்பு அரசியலோடு, இந்திய அரசுக்குட்பட்ட தனி மாநில அரசு என்ற கோரிக்கையும் உருப்பெறுகின்றது. 1937ல் தமிழ்நாடு தமிழருக்கே என்ற கோரிக்கையை பெரியார் முன் வைக்கின்றார்.

மூன்றாவது காலகட்டமாக 1938ம் ஆண்டுக்கும் 1962ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலகட்டத்தை அ.மார்க்ஸ் குறிப்பிடுகின்றார். 1938ல் உச்சமடைந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியினூடே, தனிநாடு கோரிக்கை வலுப்பெறுகின்றது. பாகிஸ்தானின் பிரிவினையைக் கோரிநின்ற ஜின்னாவை பெரியார் 1939ல் சந்தித்து தமிழரின் தனிநாட்டுக் கோரிக்கைக்கு ஆதரவு கோருகின்றார். ஜின்னாவுடனான இந்தச் சந்திப்பின் பின்னர்தான் தமிழ்நாடு கோரிக்கையானது திராவிடநாடு கோரிக்கையாக மாறுகின்றது.

1947ல் இந்தியா சுதந்திரம் பெறுகின்றது. எனினும் பாகிஸ்தான் உருவானது போல திராவிடநாடு உருவாகாத காரணத்தினால் இந்திய சுதந்திரநாளை ஒரு துக்க நாளாக பெரியார் அறிவிக்கின்றார்.

ஆனால் கட்சிக்குள் பெரியாரின் வலதுகரமாகத் திகழ்ந்த அண்ணாத்துரையோ இத்துக்க பிரகடனத்தை எதிர்க்கின்றார். இந்திய சுதந்திரததை வரவேற்கின்றார். இது இந்திய தேசத்துவக் கட்டமைப்புக்குள் அண்ணா உள்வாங்கபபடுகின்றதைக் காட்டுகின்றது. 1949ல் பெரியாரைப் பிரிந்து திராவிட முன்னேற்றக் கழகத்தை அண்ணாத்துரை ஆரம்பித்த போது அவர் திராவிடநாடு கோரிக்கையை முன்வைததது உண்மைதான். 'அடைந்தால் திராவிடநாடு, இல்லையேல் சுடுகாடு' என்று முழஙகிய அவர் 1962ல் இந்திய அரசு பிரிவினைச தடைச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது திராவிட நாடடுக் கோரிக்கையை கைவிட்டார்.

திராவிட நாட்டுப் பிரிவினையைக் கோரி ஒரு பிரிவினைவாதியாகத் தன்னை காட்டிக் கொண்ட போதும் அடிப்படையில் இந்திய தேசக் கட்டமைப்பையும் அதன் தேசியச் சின்னங்களையும் மதிப்பவராகவே இருந்தார். உதாரணத்திற்கு இந்தியத் தேசியக்கொடியைக் கொழுத்துகின்ற போராட்டத்தை தந்தை பெரியார் செய்தபோது அதிலிருந்து அண்ணாத்துரை விலகியே நின்றார். அது மட்டுமல்லாமல் கிளர்ச்சிப்போராட்டம் அதாவது மறப்போராட்டத்தையும் அண்ணா தவிர்த்து நின்றார். மகாத்மா காந்தியின் வழிநின்ற காங்கிரஸ்காரர்கள் கூட 1940களில் தண்டவாளப் பெயர்ப்பு, தபாற் காரியாலய எரிப்பு என்ற கிளர்ச்சிப் போராட்டத்தை நடாத்தியபோது அண்ணாத்துரை அதனை வரவேற்கவில்லை. அதுகுறித்த 1950களில் அண்ணாத்துரை பேசும்போது காங்கிரஸ்கார்களின் போராட்டத்தை இவ்வாறு கூறுகின்றார்.

காங்கிரஸ்காரர்களின் இந்தப் போராட்ட முறைகள் சரியல்ல என்று நாம் மனதார நம்பினோம். வீணான கலவரம், கலகம், குழப்பம் பொருட்சேதம் இவைதான் மிச்சம் என்று எண்ணினோம். எனவேதான் ஒதுங்கி நின்றோம்.

பின்னர், மெதுவாக நாஸ்திகப் பாதையிலிருந்து நழுவினார் அண்ணாத்துரை. ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற முழக்கம் முன்வைககப்பட்டது. தேர்தல் சாக்கடையில் இறங்காமல் மக்களைத் திரட்டி மக்கள் போராட்டத்தை நடாத்த வேண்டும் என்கின்ற பெரியாரின் கொள்கையிலிருந்தும் அண்ணாத்துரை விலகினார். இதன் பின்னர்தான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் புகழ்பெற்ற சொல்லாடலான கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற முழககம் உருவாகியது. வெளிப்படையாகப் பார்த்தால் அடுக்குமொழியிலமைந்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற சொல்லாக்கம் திராவிட முன்னேற்றக் கழகத்துத் தொண்டர்களுக்குரிய கொள்கைக் கோட்பாடு போலத் தோன்றினாலும் அதற்கு வேறொரு நோக்கமும், குறிக்கோளும் இருந்தது என்பதை நேயர்கள் சற்று ஆழ்ந்து நோக்கினால் புரியும்.

இந்தியத் தேசியத்திற்குக் கட்டுப்பட்டு அதனுடைய தேசியச் சின்னங்களுக்குப் பணிகின்ற அந்தத் தேசத்திற்கு விசுவாசமான தமிழ் குடி மக்களை உருவாக்குகின்ற பணியை அறிஞர் அண்ணாத்துரை தன் சிரமேற்கொண்டதன் வெளிப்பாடுதான் இந்த 'கடமை கண்ணியம் கட்டுப்பாடு' சொற்றொடர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்குரிய பிரசாரங்களை மக்களுக்கு எடுத்துச் சென்ற பலம் வாய்ந்த சாதனமாக சினிமா என்று அழைக்கப்படுகின்ற திரைப்படத்துறை இருந்தது. அண்ணாத்துரை-கருணாநிதி கூட்டமைப்பில் எடுத்தாளப்பட்ட கதையாடல்களையும், விளைவுகளையும் குறித்து சிறிது சிந்திப்போம்.

திராவிட இயக்கத்தவர்களான அண்ணா, கலைஞர், எம்.ஜி.ஆர், எம்.ஆர். ராதா, தங்கராசு, சிற்றரசு, பாரதிதாசன் முதலானோரின் திரைப்படப் பிரவேசம் என்பது கிட்டத்தட்ட தி.மு.கவின் உதயத்தோடு இணைத்துப் பார்க்க வேண்டிய ஒன்றாகும். 1949ல் வேலைக்காரி, 1951ல் பராசக்தி என்று தொடங்கி 1967ல் ஆட்சியைப் பிடிக்கும்வரை தி.மு.கவின் அரசியல் வளர்ச்சி ஏறுமுகமாகவே இருந்தது. அது மட்டுமல்லாமல் அன்றைய காலகட்டத்திலிருந்து இந்திய அரசியல் அமைப்பின்மீது தி.மு.க நம்பிக்கையும் கொண்டிருந்ததால் இந்திய அரசியல் யாப்பையோ அன்றி அரசியலையோ விமர்சிக்கும் செயற்பாடுகளையும் அது மேற்கொள்ளவில்லை. அதனால் அன்று தொடங்கி பின்னாளில் தேசியச் சின்னங்களை அவமதிக்கும் வடிவில் பெரியார் மேற்கொண்ட பேராட்டங்களான தேசியக்கொடி எரிப்பு, தேசப்பட எரிப்பு, அரசியற் சட்டப்பிரதி எதிர்ப்பு, நீதிமன்றக் கண்டனம் போன்றவற்றிலிருந்து அண்ணாத்துரை விலகி நின்றதோடு மட்டுமல்லாமல் இப்போராட்டங்களையும் அண்ணாதுரை கண்டித்தே வந்தார்.

எனினும் திராவிட இயக்கத்தவரின் திரைப்படங்கள், அன்றைய மேட்டிமைச் சக்திகளாலும் அரசியல் சக்திகளாலும் மிகக் கடுமையாகத் தாக்கப்பட்டன. பராசக்தி திரைப்படத் தைத் தடைசெய்வதற்குப் பலமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இளைஞர் களையும், மாணவர்களையும் கெடுக்ககூடியன வென்றும், சமூக ஒழுங்கைக் குலைப்பன என்றும் இத்திரைப்படங்களை அதிகார சக்தியினர் கண்டித்தார்கள்.

இம் முயற்சி வெற்றி பெறாத காரணத்தினால் பின்னாளில் வேறு பாணியில் இத்திரைப்படங்களை அவர்கள் கண்டிக்கத் தொடங்கினார்கள். யதார்த்தத்திற்குப் பொருந்தாத அடுக்குமொழி வசனங்கள் நிரம்பிய திரைப்படங்கள் என்றும் அவர்கள் கண்டித் தார்கள்.

இந்த மேட்டிமைச் சக்திகளின் தாக்குதல்கள் கடுமையாக இருந்தபோதும் இத்திரைப்படங்கள் மிகுந்த வரவேற்பைப் பெற்றன. பல திரைப்படங்கள் நூறுநாட்களைத் தாண்டி ஓடின. இனி இப்படியான திரைப்படங்களுக்குத்தான் சந்தை, பெரும் பணம் ஈட்டலாம் என்பதை உணர்ந்த பெரும் தயாரிப்பாளர்கள் திராவிட இயக்கத்தவர்களது கதைவசனங்களுக்காகக் காத்து நின்றார்கள்.

அடித்தட்டு மக்களின் பேராதரவோடு தமிழ்த் திரைப்பட உலகில் கால் நூற்றாண்டு காலத்திற்குத் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் முக்கிய சக்திகளாக விளங்கினர்.

அதிகாரத்தில் அரசியல் அமைப்பிலுள்ள குறைகளை அவர்கள் விமர்சிக்கவில்லை. மாறாக குறைகளுள்ள அந்த அதிகாரங்களைத் தாங்களே ஆளவேண்டும் என்றே தி.மு.க விரும்பியது. அதாவது அதிகாரப்பதவிகளில் டில்லி ஏகாதிபத்தியம், மற்றும் அவர்களது முகவர்களுக்குப் பதிலாகத் தாமே உட்கார வேண்டும் என்பதே தி.மு.கவின் அபிலாசையாக, வேட்கையாக இருந்தது. ஆகவே பெரிய அளவில் திரைப்படத்தை ஒரு கலக ஆயுதமாக அத்துமீறல் சாதனமாகப் பயன்படுத்துவதற்கு தி.மு.க. தயாராக இல்லை என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

ஆகவே, அவர்கள் எந்த ஒழுங்கையும் பெரிய அளவில் கேள்விக்குள்ளாக்கவில்லை. எங்கள் எதிர்ப்புக்கள் என்பன, கோவில்களே கூடாது என்பதற்காக அல்ல கோவில்கள் கொடியவர்களின் கூடாரங்களாக ஆகக்கூடாது என்பதற்காகத்தான் என்பதனை தி.மு.கவினர் வலியுறுத்தினார்கள். தாங்கள் நாத்திகரல்ல என்பதும் 'ஒன்றே குலம் ஒருவனே தேவன' என்பதும் போன்ற கோஷங்களும் முன்வைக்கப்பட்டன.

பார்ப்பனியத்தின் மீதான விமர்சனமும் மிகவும் நெளிவுசுளிவாகவே மேற்கொள்ளப்பட்டது. இந்துமதத்தின் அடிப்படையான வர்ணாச்சிரமத்தை அண்ணாத்துரையின் தி.மு.க கேள்விக்கு உள்ளாக்கவில்லை. திராவிட இயக்கத்தவர்களின் திரைப்படங்களில் தீண்டாமை ஒரு பிரச்சினையாக எடுத்துக் கொள்ளப்படவில்லை. என்.எஸ் கிருஷ்ணனின் 'நல்லதம்பி' என்ற திரைப்படம் மட்டும் ஒரு விதிவிலக்காகும். முக்கிய பாத்திரங்களாகத் தாழ்த்தப்பட்டவர்கள் இவர்களது திரைப்படத்தில் தோன்றவில்லை.

சாதிப் பிரச்சினையைப் பற்றி பேசியதற்காகவும் கலப்புத் திருமணத்தில் முடிவதற்காகவும் மிகவும் புகழப்பட்ட அண்ணாத்துரையின் வேலைக்காரி திரைப்படத்தில் உயர்சாதிக் கதாநாயகனைக் காதலித்து மணக்கின்ற வேலைக்காரப் பெண்ணும் ஒரு தொடக்கூடிய சாதியைச் சேர்ந்தவள்தான் என்பது குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமல்லாது அவள் தொடக்கூடிய சாதியை சேர்ந்தவள் என்ற விடயமும் இத்திரைப்படத்தில் மீண்டும் மீண்டும் சுட்டிக் காட்டப்படுகின்றது.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் திரைப்படங்களில் பார்ப்பனரல்லாத மக்களின் பண்பாட்டு அடையாளங்கள் சிறப்பிக்கப்பட்டுக் காண்பிக்கப்பட்டமை குறித்து மகிழ்ச்சி அடைகின்ற அதேவேளை, தமிழின் பண்பாட்டுப் பன்மைத்துவம், தாழ்த் தப்பட்ட மக்களின் பண்பாடுகள், அவர்களது பிரச்சினைகள் குறித்து தி.மு.கவினரின் திரைப் படங்கள் முன்னிலைப்படுத்தப்படவில்லை என்பதும் அவதானிக்கப்பட வேண்டும்.

சுருக்கமாகச் சொல்வதென்றால் அப்போதிருந்த நிலைமைகளில் சீரமைப்பு எதையும் மேற்கொள்ளும் நோக்கம் அரசியலில் இல்லாதது போன்றே திரைப்படத்துறையிலும் திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இருக்கவில்லை என்று காட்டமாகக் கருத்து ஒன்றை அ.மார்க்ஸ் முன்வைக்கின்றார். பெண்ணிய நோக்கிலும் தி.மு.க பிரமாதமாக ஒன்றும் செய்துவிடவில்லை. அத்தோடு தி.மு.க தந்தைவழிச் சமூகம் கற்பிக்கும் இறுக்கமான ஒழுங்குகளும் பார்ப்பனியத்துடன் ஒருவழியில் பிணைந்தே நின்றன. தாசிகள், தொழுநோயாளிகள் முதலான விளிம்பு நிலையினரை மற்றைய திரைப்படங்களைப் போலவே தி.மு.கவினரின் திரைப்படங்களும் ஆணாதிக்க நோக்குடன் அணுகின. திருவாரூர்த் தங்கராசா எழுதி எம்.ஆர். ராதா நடித்துப் புகழ் பெற்ற படமான ரத்தக்கண்ணீர் இந்தப் போக்கினையே சுட்டி நிற்கின்றது. அண்ணாத்துரையின் ரங்கூன் ராதா நாடகப்பிரதித் திரைப்படத்திற்காகத் திருத்தம் செய்யப்பட்டது. நாடகத்தில் இயல்பாகச் சித்தரிக்கப்பட்ட கதாநாயகிப் பாத்திரம் திரைப்படத்தில் வரும்போது கற்புக்கு எந்தவிதக் களங்கமும் கற்பிக்க இயலாதபடி புனிதவதியாகத் திருத்தப் பட்டது.

தொடக்க காலத்தில் அண்ணாத்துரையையும் அவரது கட்சியையும் அவரது கட்சியின் திரைப்படங்களையும் கடுமையாக எதிர்த்த ஆதிக்க சக்திகள், மிக விரைவில் இவற்றை உள்வாங்கின. திராவிட இயக்கத்தவரின் திரைப்படங்களையும், படைப்பாளிகளையும் ஏற்றுக் கொண்டன. திராவிட இயக்கத்தவரின் திரைப்பட முயற்சிகள் தவிர்க்க இயலாதவை என்ற போதும் அவை தமக்கும் தம்முடைய கோட்பாட்டிற்கும் ஆபத்தைக் கொண்டு வராது என்பதை உணர்ந்து கொண்ட இம் மேட்டிமைச் சக்திகள் இவற்றை வரவேற்று இவற்றைத் தம்முள் உள்வாங்கின.

இவ்வாறாக பெரியாரிடமிருந்து பிரிந்த அண்ணாத்துரை அவர்களின் திராவிட முன்னேற்றக்கழகம் பல அம்சங்களில் பெரியாருக்கு முந்திய நிலைமைக்குச் சென்றது. பார்ப்பனரின் சடங்கு மேலாண்மைக்கான எதிர்ப்பு நிறுத்தப்பட்டது. தமிழ் உணர்வும், தமிழ்ப் பெருங்கதைப் பாடல்களும் இந்தியத் தேசிய உணர்வில் கலந்தன. தி.மு.கவின் தேசியவாதத்தை பார்ப்பனர் சக்திகள் சுகமாக உணரும் நிலை உருவாகியது.

1972ல் தி.மு.கவில் ஏற்பட்ட பிளவு கொள்கை அடிப்படையில் ஏற்பட்டதல்ல! கருணாநிதிக்கும் எம்.ஜி.ஆருக்கும் ஏற்பட்ட தனிநபர் முரண்பாடுகள் பின்னர் விகாரமான தனிநபர் பகையாக உருக்கொண்டது. எம்.ஜி.ஆர் அவர்கள் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு மிக்க ஆதரவாக இருந்தபோதிலும் அவர் மறைவுக்கு பின்னர் அ.தி.மு.கவின் தலைமையானது தமிழீழத் தேசியத்திற்கு எதிரான கருத்துக்களையும், செயற்பாடுகளையும் கொண்டுள்ளவிடயம், இன்னொரு காலத்தில் ஆராயப்பட வேண்டியதாகும். ஆனால் தமிழகத்துத் தமிழ்த் தேசியம் என்ற கண்ணோட்டத்தில் பார்க்கும்போது தி.மு.க வை மிஞ்சிய சீரழிவுக் கட்சியாகவே, அ.தி.மு.க செயல்பட்டுவருகின்றது.

தி.மு.க.விலிருந்து பிரிந்து உருவாகிய மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகமும் தமிழீழத் தேசிய நலனையோ அல்லது தமிழகத்துத் தமிழ்த் தேசிய நலனையோ தமது மூலாதாரக் கொள்கையாக வைத்திருக்க வில்லை என்பதை அவர்களது முரண்பாடான செயல்களே சுட்டிக்காட்டும். தி.மு.க தலைவர் கருணாநிதி தனது 77வது பிறந்தநாள் செய்தியாகச் சொன்னது என்ன? ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக ம.தி.மு.க 5-6-2000 அன்று சென்னையில் நடாத்த இருந்த பேரணியை நடத்த வேண்டாம் என்றுதான் கருணாநிதி, ம.தி.மு.க வைக் கேட்டுக் கொண்டார். ம.தி.மு.கவும் அதனை ஏற்றுக் கொண்டு ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக நடாத்த இருந்த பேரணியைக் கைவிட்டது.

ஈழவிடுதலை ஆதரவாளர்களாகவும், தமிழ்த் தேசிய ஆதரவாளர்களாகவும் வை.கோவும் டாக்டர். இராமதாசுவும் காட்சி அளிக்கின்றார்கள். இவர்களது கட்சிகள் காட்டுகின்ற ஈழவிடுதலை ஆதரவு என்பது தமிழ்த் தேசிய சக்திகளுக்கோ, தமிழினத்திற்கோ இவர்கள் காட்டுகின்ற சலுகை அல்ல. இப்புதிய கட்சிகளின் இருப்புக்கும் வளர்ச்சிக்கும் இவை தேவைப்படுகின்றன. வை. கோவும் இராமதாசும், பா.ஜ.க.வோடும், ஜெயலலிதாவோடும் கூட்டுச் சேர்ந்து தமிழ் இனத்திற்கு இழைத்துள்ள துரோகத்தைத் துடைக்கும் அளவிற்கு தமிழினத்திற்கு ஆதரவாக அவர்கள் போர்ப்பரணி பாடிவிடவில்லை என்றும் மணியரசன் குறிப்பிடுகின்றார். □

**நன்றி - தமிழ்க் குரல்**

# இன்று ஒரு தகவல்

## பிரம்மஞான விளக்கம்

ஒருநாள் பிரம்மஞானத்தைப் பற்றி ஏதோ கொஞ்சம் சொல்லப் போய் சிலர் நேராகவே தேடிக்கொணடுவர ஆரம்பித்துவிட்டார்கள் சார். நான் ஏதோ அந்த ஞானத்தை மொத்தமாக வைத்துக்கொண்டு வியாபாரம் செய்வதாக நினைத்துக்கொண்டு எனக்குக் கொஞ்சம் கொடு, எனக்குக் கொஞ்சம் கொடு என்று கேட்க ஆரம்பித்து விட்டார்கள்.

"என்னிடம் அது இருந்தால் நான் ஏன் இப்படி அதைப் பற்றி வெளியே சொல்லிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறேன்?" என்றேன். "சார் மிகவும் அடக்கமாகப் பேசுகிறார். நிறைகுடம் தளும்பாது" என்றார் ஒருவர். "வெறும குடமும் தளும்புவதில்லை'' என்ற விபரம் அவருக்குத் தெரியவில்லை.

ஒரு தகப்பனார் தனது இரண்டு பிள்ளைகளுக்கும் பிரம்மஞானம் வரவேண்டும் என்று ஆசைப்பட்டார். ஒரு நல்ல குருவிடம் அனுப்பி வைத்தார். குருகுலவாசம் முடிந்து அவர்கள் இருவரும் திரும்பி வந்தனர். மூத்த மகனைப பார்த்து "பிரம்மத்தைப் பற்றி நீ என்ன தெரிந்து கொணடாய்?" என்று கேட்டார் தந்தை. உடனே அவன் ஒரு பெரிய பிரசங்கமே செய்ய ஆரம்பித்துவிட்டான். வேதங்களிலிருந்தும் சாஸ்திரங்களிலிருந்தும் நிறைய உதாரணங்களை எழுத்தியம்பினான் பிரசங்கம் முடியவில்லை.

'சரி போதும் நிறுத்து' என்று கூறிவிட்டு இரண்டாவது பிள்ளையைப் பார்த்து, 'பிரமத்தைப்பற்றி நீ என்ன தெரிந்து கொண்டாய்?' என்று கேட்டார். அவன் பதில் சொல்லவில்லை..."நீ தான் பிரம்மத்தைப் பற்றி ஏதோ கொஞ்சம் தெரிந்து வைத்திருக்கிறாய்'' என்றார்.

பிரமம் என்றால் என்னவென்பதைப் பற்றி முழுதும் தெரிந்து கொண்டதாக பலரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். அது எப்படி இருக்கும் என்றால் பிரம்மாண்டமான சர்க்கரை மலையிலிருந்து ஒரு துணுக்கு சர்க்கரையை எடுத்துக்கொண்டு செல்லும் எறும்பு அடுத்த முறை முழுச் சர்க்கரை மலையையும் தூக்கிச் செல்வேன் என்று சொல்வது போலிருக்கிறது என்கிறார். ராமகிருஷ்ண பரமஹம்சர் பிரம்மம் என்பது நமது எண்ணங்களுக்கும் வார்த்தைகளுக்கும் அப்பாற்பட்டது. சுகதேவர் மாதிரி உள்ள பெரிய மகான்கள் கூட இந்த விடயத்தில் ஒரு பெரிய எறும்பு என்று சொல்லலாம். அவர்கள் ஒரு ஏழெட்டு சர்க்கரைத் துணுக்கைத் தூக்கிச் சென்றிருப்பார்கள் அவ்வளவுதான்.

பிரம்மம் என்ற பெரிய கடலின் கரையில் நின்று அவர்கள் காலை நனைத்திருக்கிறார்கள். அதில் அவர்கள் மூழ்கவில்லை. மூழ்கியிருந்தால் திரும்பியிருக்கமாட்டார்கள். ஒரு சிறிய உப்பு பொம்மை இருந்ததாம் அதற்கு ஒரு ஆசை என்ன தெரியுமா? கடல் எவ்வளவு ஆழம் இருக்கிறது என்று நேராக உள்ளே சென்று பார்த்து கண்டுபிடிக்க வேண்டும் என்று ஆசை.

ஆசை வந்த பின் சும்மா இருக்குமா? சரி அளந்து பார்த்து விடுவோம் என்று தீர்மானம் செய்தது. உடனே பொத் எனறு கடலில குதித்துவிட்டது. கொஞ்சத் தூரம் போனது அவ்வளவுதான. உப்பு பொம்மை கடலில் விழுந்தால் என்ன ஆகும்? கொஞ்சம் கொஞ்சமாகக் கரைய ஆரம்பித்து விட்டது.சிறிது நேரத்தில் கரைந்து ஒன்றுமில்லாமல் போய் விட்டது. அந்த பொம்மையால் ஆழத்தை கண்டுபிடிக்க முடியவில்லை.

அதையே கண்டுபிடிக்க முடியவில்லை என்று ஆன பின்பு அது போய் கடல் ஆழத்தை எந்தக் காலத்தில் கண்டு பிடிக்கப் போகிறது? பிரம்மஞானம் வந்துவிட்டால் மனிதன் மௌனமாகி விடுகிறான். அது வரும் வரைக்கும் அவன் சர்ச்சை செய்து கொண்டிருப்பான். தேன் குடிப்பதற்காக ஒரு வண்டு வருகிறது. அது மலர் மீது உட்காரும் வரைதான் ரீங்காரம் செய்து கொண்டிருக்கும். உட்கார்ந்து விட்டால் மௌனமாகி விடும். இவை யாவும் ராமகிருஷ்ணருடைய அமுதமொழிகள்.

என்னிடம் வந்து பிரம்மஞானத்திற்கு விளக்கம் கேட்க ஒருவரிடம்... எனக்கு தெரிந்த எல்லாவற்றையும் சொன்னேன். அவர் என்னிடம் வரும்போது வளவளவென்று கதைத்து கேள்வி கேட்டுக் கொண்டு வந்தார். அரை மணிநேரம் என் பேச்சைக் கேட்டதும் அவர் மௌனமாகி விடடார். எழுந்து என்னிடம் சொல்லிக் கொள்ளாமல் புறபபட்டார்." ஏன் சார் புறப்பட்டு விட்டீர்களா?" என்றேன். "தெரியாமல் உங்களிடம் வந்து விளக்கம் கேட்டுவிட்டேன் அதைக் கேட்டவுடன் ஏற்கனவே கொஞ்சம் தெரிந்து வைத்திருந்ததையும் மறந்துவிட்டேன். இனிமேல் சந்தேகம் வருவதற்கே சந்தர்ப்பம் இல்லை. அதனால் மௌனமாகி விட்டேன்'' என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை விரைவில் மாற்றப்படும் –அமைச்சர் அநுரா

(கொழும்பு)

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை விரைவில் மாற்றப் படுமென சுற்றுலாத்துறை மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார்.**

இதன் பொருட்டு தற்போதுள்ள அரசியல் யாப்பு முறைமையை மாற்ற வேண்டும். தமது அரசாங்கம்



அதிகாரத்திலிருந்து விலகுவதற்கு முன்னர் இந்த மாற்றம் மேற்கொள்ளப்படும் எனவும் வியாங்கொட மத்திய மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போது அவர் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

தற்போதுள்ள தேர்தல் முறையை மாற்றியமைத்து தொகுதிவாரி தேர்தல் முறையை மீண்டும் ஏற்படுத்த வேண்டும். பல்வேறு சந்தர்ப்பங்களில் அரசியல அமைப்பை மாற்றுவதற்கு மேற்கொள்ளபபட்ட முயற்சிகள் தோல்வியடைந்தன.

நாங்கள் அனைவரும் பாராளுமன்ற முறைமையை பாதுகாப்பதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளோம்.அதனைச் செய்வதற்கு இந்த ஜனாதிபதி முறைமை மாற்றபபட வேண்டும். இதனை மாற்றுவதன் மூலம் மீண்டும் தொகுதிவாரி முறைமைக்கு செல்ல வேண்டும்.

நான் கம்பஹா மாவட்டத்தின் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எனக்கு வாக்குகள் கிடைத்தன. அத்தனகலையிலும் நீர்கொழும்பிலும் வாக்குகள் கிடைத்தன.

ஆனால் எனக்காக வாக்குப் போட்டவர்கள் யாரென்று எனக்குத் தெரியாது. பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அந்த மக்களை தற்போதுள்ள முறையின் கீழ் இனங்காண முடியாது.

இதனை மாற்ற வேண்டும் என்று எனது தாயார் 1978ஆம ஆண்டில் முதலில் உறுதியளித்தார். பின்னர் எனது சகோதரி உறுதியளித்தார். ஆனால் அவராலும் இயலாமல் போனது. எனினும் நாம் அதிகாரத்திலிருந்து விலகுவதற்கு முன்னர் இந்த முறைமையை மாற்றுவோம் என்றும் குறிப்பிட்டார். (ந-8)

# சுனாமி அனர்த்த சுற்றுநிருபத்தின்படி விளையாட்டுப் போட்டிகளை எவரும் எளிமையான முறையில் நடத்தவில்லை

## கோட்டக்கல்வி அதிகாரி தவராசா கவலை

(கொழும்புத்துறை)

எதற்கெடுத்தாலும் வெளிநாட்டவர்களை பின் பற்றுகின்றோம். பானட் வாசித்தல்,இடைவேளை பாடல போன்றவற்றிற்கு மேலைத்தேய இசைகளில் தங்கி நிற்காது தமிழீழத்தில் உள்ள கலாச்சாரங்களைப் பின்பறறி போராட்ட வரலாற்றுப் பாடல்களை இனி வரும் காலங்களில் பாடுவதற்கு அனைவரும் முன்வர வேண்டும். இவ்வாறு தெரிவித்தார் கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தங்கராசா.

புனித சாள்ஸ் மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி அதிபர் எஸ்.ஞானப்பிரகாசம் தலைமையில் நடைபெற்றது.அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

எவருக்கும் எதுவும் முடியும் என்ற மன வைராக்கியம் வேண்டும். விளையாட்டில் வீழ்ந்தாலும் மீண்டும் எழும்ப வேணடும். சர்வதேச தரத்தில் இடைவேளையில் நடைபெறுகின்ற குழு நடனங்களை யாழ். மாவட்டப் பாடசாலைகள் பின்பற்றுகின்றன. இதைவிட சில பாடசாலைகள் சினிமாவின் பாணியைப் பின்பற்றுவதை அவதானிக்கலாம்.

தமிழினத்தை இன்று சர்வதேசம் கவனிக்கின்றது.இந்த நிகழ்விற்கு இங்கிலாந்தில் இருந்து 'சைமன்' னும் வருகை தந்திருப்பது சிறப்பம்சமாகும்.

யாழ்.மாவட்டப் பாடசாலைகள் மற்றப் பாடசாலைகளோடு போட்டியாக செயற்படுகின்றது. இதற்காக பணம் கொடுத்து வாங்கப்படும் உடைகள், பொருட்களை பல்பொருள் பயன்பாடாக மாற்றலாம்.

சுனாமி அனர்த்தம் காரணமாக எளிமையான முறையில் இத்தகைய விளையாட்டுப் போட்டிகளை செயல் படுத்துமாறு சுற்றுநிருபம் வெளியிடப்பட்டிருந்தது. பெரும்பாலும் இதை பாடசாலைகள் கடைப்பிடித்ததாகத் தெரியவில்லை. இது வருத்தத்துக்குரியது என அவர் மேலும் தெரிவித்தார். (ப-51)

# தொழிலாளர் பற்றாக்குறையை நீக்குவதற்கு அரசு துரித நடவடிக்கை

(கொழும்பு)

கட்டட நிர்மாணத்துறையில் நிலவுகின்ற பயிற்சி பெற்ற தொழிலாளர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கு துரித நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக தொழில்நுட்ப கல்வி அமைச்சர் பியசேன கமகே தெரிவித்துள்ளார்.

இந்தப் புதிய வேலைத் திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றிற்கு 400 பேரை கட்டட நிர்மாணத்துறையில் பயிற்சியளித்து வேலைகளுக்கு பயன்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதன்படி மேசன், தச்சுவேலை, மின்இணைப்பு, குழாய்இணைப்பு ஆகிய துறைகளில் இவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

6 மாத பயிற்சிகளைக் கொண்ட இந்தக் கற்கை நெறிகள் புதிய திட்டத்தின் கீழ் 6 வாரங்களுக்குள் பூர்த்தி செயயப்பட்டு கடற்பேரலையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில நிர்மாணப்பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

இந்தப் பகுதிகளில் நிர்மாணப் பணிகளில் ஈடுபடுபவர்களுக்கு செயன்முறைப் பயிற்சியாகவே இது வழங்கப்படுவதோடு இடைக்கால விஷேட கொடுப்பனவை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது.

இதன்மூலம் கட்டட நிர்மாணத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த ஊழியர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய முடியும் என்று தெரிவித்த அமைச்சர், இந்தப்பயிற்சிகளின் பின்னர் அவர்களுகசு நிரந்தர தொழில் ஒன்றை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப் படும் எனத் தெரிவித்தார். (க-9)

# கோரிக்கை

(மருதங்கேணி)

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த சுகாதாரப் பரிசோதகர் களுககு மோட்டார் சைக்கிள்கள் வழங்கப்பட வேண்டுமென சுகாதாரப் பரிசோதகர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.இது சம்பந்தமாக சுகாதார அமைச்சருக்கு மகஜர் ஒன்றும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ந-35)

# 15 முக்கிய கொள்கைகளை உள்ளடக்கிய திட்டமொன்று ஐ.தே.க வினால் ஆரம்பம்

(கொழும்பு)

நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான ஐக்கிய தேசியக் கட்சியின் கட்சிச் சார்பற்ற பொதுக் கொள்கை விவாதத் திட்டமொன்று கடந்த செவ்வாய்க்கிழமை ரணில் விக்கிரமசிங்கவினால் ஆரம்பித்து வைக்கப் பட்டுள்ளது.

இதில் புத்திஜீவிகள் மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் பலரும் கலந்துகொண்டனர்.

ஏற்கனவே ஐக்கிய தேசியக் கட்சியினால் முன் வைக்கப்பட்ட பொதுக் கொள்கைப் பணித்திட்டத்தின் கீழ் 15 முக்கிய எண்ணக்கருக்கள் இதில் முன்வைக்கப் பட்டுள்ளன.

இது குறித்து அக் கூட்டத்தில் கருத்துத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க,

நாங்கள் முன்வைத்துள்ள இந்த 15 முக்கிய திட்டங்கள் அனைத்தும பெறுமதியானவை.

இதுதொடர்பில் ஆரம்பித்து வைக்கப்பட்ட விவாதம் நாடளாவிய ரீதியில் முன்னெடுத்துச் செல்லப்படும்.

அரசியல் கட்சிகள் மற்றும் சிவில் சமூகங்களின் இணக்கப்பாட்டுடனேயே நாட்டை மீளக் கட்டியெழுப்புவதறகான இப் பொதுக் கொள்கை தொடர்ந்து முன்னெடுக்கப்படும்.

சமாதானம், ஜனநாயகம், அபிவிருததி, சிறந்த வாழ்க்கை நிலை, குடியிருப்புக்கள், பெண்கள் மற்றும் சிவில் சமூகம் போன்ற துறைகள் குறித்து புத்திஜீவிகளினதும், பொது மக்களினதும், அரசியல் கட்சிகளினதும் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக 6 பிரதான குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இக்குழுவில் பாராளுமன்ற உறுப்பினா ஜி.எல்.பீரிஸ் சமூக ஜனநாயகம் தொடர்பிலும், சிவில் சமூக அபிவிருத்தி தொடர்பில் மிலிந்த மொறகொடவும், குடியிருப்புத் தொடர்பில் இம்தியாஸ் பார்க்கீர் மார்க்கரும் நியமிக்கபபட்டுள்ளனர். இவ்வாறு ஏனைய பொறுப்புகளுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர் என்றார். (ந-4)

# துயரத்தின் எல்லைகள்

"அக்கா வந்திட்டாளா?" என்று கேட்டபடியே தான் வாங்கி வந்த மரக்கறிப் பையை அவளிடம் கொடுத்தாள் மீனாட்சி.

"அக்கா நாலு மணிக்குப் போனவ, இன்னும் காணல்ல..."

அவள் வந்து சேர்ந்திடுவாள். நீ வெங்காயத்தை உரித்துக் காய்கறிகளை நறுக்கிவை. இவன் சசி எங்க போயிட்டான்?

"அவன் அங்க நாகேஸ்வரி அக்கா வீட்டில விளையாடிக்கொண்டிருக்கிறான். அக்கா வர முந்தி அவனைக் கூப்பிடுங்கோ" என்றபடியே, "சசி! சசி!" என்று குரல் கொடுக்க ஆரம்பித்தாள் அவள்.

"வந்திட்டன் சித்தி!" என்றபடியே ஓடிவந்து பாட்டியின் மடியில் விழுந்தான் சசி. அவனை அணைத்து முத்தமிட்ட மீனாட்சி பெருமூச்செறிந்தாள்.

சசிக்கு நான்கு வயதாகின்றது. அவன் மைதிலி வயிற்றில் ஆறு மாதமாக இருக்கும்போது அவன் தகப்பன் விநாயகமூர்த்தி அரசியல் காரணங்களுக்காய் தலைமறைவாய்த் திரிய வேண்டி ஏற்பட்டு வீட்டை விட்டுப் புறப்பட்டவன்தான் இன்று வரை எந்தவிதத் தகவலும் இல்லை. எந்த விடுதலை இயக்கத்தில் இருக்கின்றான் என்றும் எந்தத் தேசத்தில் இருக்கிறான் என்றும் எந்தத் தகவலும் இல்லை.

ஆனால் மைதிலி மட்டும் கலங்காமல் அவனைக் கண்ணும் கருத்துமாய் வளர்த்து வருகின்றாள். அவர்களது தேசம் ஆண்களற்ற தேசமாகவும், ஆண்கள் குறிப்பாக இளைஞர்கள் நடமாடவே முடியாத அளவுக்கு அவர்களது தேசம் அராஜகத்திற்கு அடிமைப்பட்டுப் போய்க்கொண்டிருப்பதை அவர்கள் கண்ணீருடன் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

விநாயகமூர்த்தி போன பின்பு மைதிலி பட்ட கஷ்டங்கள் அவளுக்கு இதயத்தில் இரத்தத்தை வடிய வைத்தது. குழந்தை பிறந்த நாளிலிருந்து தன் உடம்பையும் பற்றிக் கவலைப்படாது ஓடி ஓடி வேலை செய்வதும், பிள்ளைகளுக்கு டியூசன் சொல்லிக் கொடுப்பதுமாகச் சிறுகச் சிறுகச் சம்பாதித்துத் தன் குடும்பத்தைக் கட்டிக்காப்பது மீனாட்சியின் இதயத்தைப் பிழிந்தெடுத்தது.

ஓய்வுபெற்ற ஆசிரியையான மீனாட்சியின் பென்சன் பணம் அக்குடும்பத்தின் செலவுகளுக்கு எப்படிக் கட்டுப்படியாகும்? அதுவும் சூழ்நிலையின் காரணமாக ஒழுங்காகப் பென்சன் பணம் கிடைப்பதில்லை.

எப்படி இருந்த குடும்பம் அது? நினைக்கும்போது மீனாட்சிக்கு மனவருத்தமாக இருந்தது.

விநாயகமூர்த்தி ஒரு வியாபாரி. சிறிய கடை ஒன்றினை நடத்திவந்தான். தவிரவும் இலக்கியத்தின் மீதும், சமூகத்தின் மீதும், ஆழ்ந்த பற்றுக்கொண்டவன். இத்தகைய நேசிப்பின் காரணமாக அவன் மாதாந்த இலக்கியப் பத்திரிகை வெளியிட்டதன் காரணமாக பொலிஸார் அவனைக் கைதுசெய்தபோதுதான் அக்குடும்பத்தின் பிரச்சினைகள் பூதாகரமாயின.

பின்னர் விநாயகமூர்த்தியைப் பொலிஸாரிடம் இருந்து மீட்பதற்கே அவனது கடையை விற்க நேர்ந்தமை பற்றி மைதிலி கவலைப்படவேயில்லை. அவளுக்குச் சித்திரத்தை விடச் சுவரே முக்கியமாயிருந்தது!



அவன் வீட்டைவிட்டு வெளியேறிய தினத்தன்று அவன் சொன்ன வார்த்தைகள் இன்னும் அவள் காதுகளில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.

குடும்பத்திற்காக வாழ்தல் என்பது ஒரு சாதாரண மனிதன் செய்யக்கூடியதுதான். ஆனால் நாட்டுக்காகவும், இனத்துக்காகவும் வாழவேண்டிய இருதார்மீகக் கடமை எனக்கு இருக்கின்றதாகக் கருதுகின்ற மனிதன் நான். அதனால்தான் நான் இந்த முடிவுக்கு வந்தேன். நான் இண்டைக்கு வீட்டைவிட்டு வெளியேறினால் எண்டைக்காவது ஒரு நாள் என்னை நீங்கள் உயிருடன் பார்க்கலாம். ஆனால் இங்கேயே இருந்தால் பலாலி இராணுவ முகாமிலோ, பூஸா முகாமிலோ நான் இறப்பதை யாராலும் தடுக்கமுடியாது. எனது முடிவை நீங்கள் சட்டென்று ஏற்றுக்கொள்ள முடியாவிட்டாலும் காலப்போக்கில் ஏற்றுக்கொள்வீர்கள்.

விநாயகமூர்த்தி அன்று சொன்னதை இன்று நினைத்தாலும் மீனாட்சிக்கு ஆச்சரியமாக இருக்கின்றது. அவன் வெளியேறிய இரண்டு நாள்களுக்கெல்லாம் இராணுவத்தினர் அவனைத்தேடி வீட்டுக்கு வந்துவிட்டனர்.

"விநாயகமூர்த்தி எங்கே?" என்று கேட்ட போது வியாபார விசயமாகக் கொழும்பு சென்றுவிட்டதாகச் சொன்னார்கள். அதை இராணுவத்தினர் நம்பவில்லை. வீடெல்லாம் சோதனை போட்டார்கள். பக்கத்து வீடுகளில் உள்ள இளைஞர்களையெல்லாம் கைதுசெய்துகொண்டு போனார்கள். இன்று அந்த ஊரிலேயே இளைஞர்கள் இல்லை என்ற அளவுக்கு நிலைமை மோசமாகிவிட்டிருந்தது.

மீனாட்சி பழைய நினைவுகளிலேயே மூழ்கியிருந்தாள். மரக்கறி வெட்டிக்கொண்டிருந்த அவள் மகள் தேநீரைக் கொண்டு வந்து கொடுத்து விட்டு,

"அம்மா அக்காவை இன்னும் காணம், எனக்குப் பயமாக இருக்கம்மா" என்றபோது தான் இரவு மணி ஏழாகியும் தன் மகள் மைதிலி வீடு திரும்பாதது அவளுக்கு உறைத்தது. வழக்கமாகவே நாலுமணிக்கே ஊர் அடங்கிவிடும் வழக்கத்தைக் கொண்டிருந்தது. அதன் பிறகு வீதியெங்கும் இராணுவத்தினரின் ஆட்சிதான். இரவில் வீடுகளில் மின்சாரத்துக்குப் பதில், மெழுகுவர்த்திதான் எரிந்துகொண்டிருக்கும். 'இப்படி எத்தனை காலங்கள்தான் நாம் வாழ்ந்துகொண்டிருப்பது?' என்ற வேதனை கலந்த ஏக்கம்தான் எல்லோர் மனதிலும் படிந்திருக்கும்.

**மகிழ்வுகளுக்கு எல்லைகள் இருக்கலாம் - ஆனால் எங்கள் துயரங்களுக்கு எல்லைகளே இல்லை.**

ஏழரை மணிக்கு மைதிலி விழுந்தடித்துக்கொண்டு ஓடி வந்தாள்.

"டவுனில் பெரிய சண்டை நடக்குது. ஆமிக்காரரும் பொடியளும் சூடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் வந்த பஸ்ஸைத் திருப்பிச் சோனக தெருவில இறக்கிவிட்டார்கள். அங்க இருந்து பயந்து பயந்து ஒவ்வொரு வீடாக ஒளிந்திருந்து பதுங்கிப் பதுங்கி நான் வாறன்" என்று படபடப்பாகச் சொன்னபடியே குலுங்கி அழ ஆரம்பித்தாள் மைதிலி.

தனது கையில் இருந்த தேநீரை அவளுக்குக் கொடுத்து, அவளைச் சமாதானப்படுத்திக்கொண்டு மீனாட்சி சொன்னாள்.

"நீ அங்க இனி டியூசன் கொடுக்கப் போகாத. பிள்ளையள வீட்டுக்கு வரச்சொல்லிப் படிப்பி. இதைத்தானே நான் அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கிறன்"

**எழுத்தாளர் அமரர் கணபதி கணேசனின் 50ஆவது பிறந்தநாள் நினைவையிட்டு இச்சிறுகதை பிரசுரமாகின்றது.**



"நான் போய்ப் படிப்பிக்கிறன் என்றதால்தான் டியூசனுக்கு ஒப்புக்கொண்டிருக்கினம். இங்க பிள்ளையள அவையின்ர தாய் தகப்பன் எப்படி அனுப்புவினம்? தெருவில எந்த நேரத்தில் என்ன நடக்கும் என்று தெரியாத சூழ்நிலையில் யார் தான நம்பித் தம் பிள்ளைகளைத் தெருவில அனுப்புவினம். அப்படியென்னா டியூசன் கொடுக்கிறதை விட்டுவிட வேண்டியதுதான். விட்டுட்டுச் சாப்பாட்டுக்கு என்ன செய்கிறது?"

மைதிலியின் கேள்விக்குத் தாயாரினால் பதில் சொல்லமுடியவில்லை. பதில் சொல்லமுடியாது என்பதை அவள் உணர்ந்தே இருந்தாள். தேநீரைக் குடித்துவிட்டுச் சசியை அழைத்துக்கொண்டு கிணற்றடிக்குச் சென்றாள் மைதிலி.

குழந்தைக்கு முகம் கழுவிச் சட்டை மாற்றி உணவூட்டுவதற்காக முற்றத்தில் உள்ள துளசிமாடத்தருகே உட்கார்ந்துகொண்டு சசிக்கு உணவூட்ட ஆரம்பித்தாள் மைதிலி.

சசியைக் காணும்போதெல்லாம் அவளின் இதயம் விம்மும். இன்னும் தந்தையின் முகத்தைக் காணாது ஏங்கும் அந்தப் பிஞ்சு விழிகளுக்குள் தேங்கிநிற்கும் ஏக்கம் இவள் விழிகளை அடிக்கடி குளமாக்கும். தந்தையின் படங்களைக் காட்டி அவன், "அப்பா அப்பா!" என்று குதூகலிக்கும் போதெல்லாம் இவள் இதயம் வேதனையில் ரணமாகும்.

சசி சாப்பிட்டு முடித்ததும் பாட்டியின் மடியில் படுத்துக்கொண்டே அப்படியே உறங்கப் போனான். ஆனால் மைதிலி?

கடந்த நான்கு ஆண்டுகளில் அவள் உறங்கியிருக்கிறாளா? அது அவளுக்குத்தான் தெரியும். எத்தனை துயரங்களை அவள் தாங்கிக்கொண்டிருக்கிறாள். மகிழ்வுகளுக்கு எல்லைகள் இருக்கலாம். ஆனால் துயரங்களுக்கு எல்லைகளே இல்லை எனபதை அவள் வாழ்வு அவளுக்கு உணர்த்திக்கொண்டுதான் இருக்கின்றது.

இரவு பதினொன்றாகியும் அவள் படுக்கையில் புரண்டுகொண்டிருந்தாள். ஊர் அமைதியாக இருந்தது. தூரத்தில் இராணுவ வண்டியின் உறுமல் கேட்டுக்கொண்டிருந்தது. வர வர அச்சத்தம் அண்மித்துக்கொண்டிருப்பது போலவும் தங்கள் வீட்டுக்கு முன்னால் அது நின்றுவிட்டது போலவும் ஓர் உணர்வு. அவளுக்குப் பயமாக இருந்தது. வீதியோரத்து வீடு அது. வீதியில் நடப்பதை வீட்டினூடாக வீட்டிலிருந்தே பார்க்கலாம். மெதுவாக எழுந்து வீட்டின் ஜன்னலைத் திறந்துபார்த்தாள். வீட்டு வாசலில் இராணுவ வண்டி நிற்பது தெரிந்தது. மூளையில் இரத்தம் உறைந்தது போன்ற ஒரு பிரமை.

'அம்மா' என்று அழைக்க வாயிலிருந்து குரல் வெளிவரவில்லை. அதற்குள் இராணுவத்தினர் வந்து கதவைத் தட்ட ஆரம்பித்தனர்.

"கெதர கவுத? தொர அரின்ந, நத்தம் கடனவா!"

"வீட்டில் யார் இருக்கிறது? கதவைத் திற, இல்லாட்டி உடைப்பம்!"

ஒருவன் சிங்களத்தில் கத்த, மற்றவன் தமிழில் கத்த, உதறல் எடுத்தபடியே எல்லோரும் எழுந்தனர். மீனாட்சி கதவைத் திறந்தாள். சசி கதற ஆரம்பித்தான். மைதிலியும் தங்கையும் நடுங்கிக்கொண்டிருந்தனர்.

"விநாயகமூர்த்தி வீடு தானே இது. எங்க அவன்?"

"அவர் வீட்டில இல்ல. அவர் இங்க வாறதும் இல்லை"

"ஆ... அவன் நேத்து இங்க வந்தவனெண்டு எங்களுக்குத் தகவல் கிடைச்சிருக்கு. எங்களிட்ட நீங்கள் ஒண்டையும் மறைக்க ஏலாது. உண்மையைச் சொல்லிப்போடு. இல்லாட்டி உங்க எல்லாரையும் சுடடுக் கொன்றுபோடுவம். அவர்கள் பேசிக்கொண்டே வீட்டின் அறைகளினுள் புகுந்து எல்லாப் பொருட்களையும் புரட்டி எறிந்துகொண்டிருந்தனர். சட்டி பானைகளைக் கூடத் துருவித் துருவி ஆராய்ந்தனர்.

மைதிலியின் கையைப் பிடித்து இழுத்தவாறு ஒரு இராணுவத்தான் சொன்னான்,

"எங்களுக்குக் கதைவிட ஏலாது. உன் ஹஸ்பெண்டுக்குத் தான் பெரிய ஆள்யெண்டு நினைப்பு. அவனைப் பிடிக்காம விடமாட்டம். நீங்க உண்மையைச் சொல்லாட்டி உங்க

(7ஆம் பக்கம் பார்க்க)

# ஈராக்கில் குண்டு வெடிப்பு

## 10 பேர் உடல் சிதறிப் பலி

(பக்தாத்)

ஈராக்கில் தினசரி கார்க் குண்டு வெடிப்புகளில் ஏராளமானவர்கள் பலியாகி வருவது அன்றாட நிகழ்ச்சியாகி விட்டது.

பக்தாத்தின் மேற்குப் பகுதியிலுள்ள இராணுவ முகாமில் நேற்றுமுன்தினம் ஆட்சேர்ப்புப் பணி நடந்துகொண்டிருந்தபோது வெள்ளை நிறக் காரில் வந்த தற்கொலைப் படைத் தீவிரவாதிகள் காரை வெடிக்கச்செய்ததில் இராணுவ வீரர்கள் உட்பட ஏழு பேர் உடல் சிதறிப் பலியாயினர். 30 பேர் படுகாயமடைந்தனர்.

பக்தாத்தின் தெற்குப் பகுதியில் இராணுவ செக்போஸ்ட் பகுதியில் நுழைந்த மற்றொரு கார் வெடித்ததில் மூன்று இராணுவ வீரர்கள் பலியாயினர். ஆறுபேர் படுகாயமடைந்தனர். (து)



தமிழக பட்ஜெட் குறித்து முதலமைச்சர் ஜெயலலிதா பேட்டியளித்த காட்சி.

# போப் மீண்டும் பேசுகிறார்

## கார்டினல் மகிழ்ச்சித் தகவல்



போப் ஜான் பாலுக்கு சமீபத்தில் தொண்டையில் அறுவைச் சிகிச்சை நடைபெற்றது. அதனால் அவரால் மீண்டும் பழையபடி பேசுவதற்குப் பல நாட்களாகும் என மருத்துவ நிபுணர்கள் கூறியிருந்தனர்.

ஆனால் தற்பொழுது போப்பைப் பார்ப்பவர்கள் அதிசயித்துப போகின்றனர். "அவர் என்னுடன் ஜேர்மன் மற்றும் இத்தாலி மொழிகளில் பேசினார். அவரால் சிரமமில்லாமல் பேசமுடிகிறது. அவருடைய சிந்தனை தெளிவாக இருக்கிறது. சில ஆவணங்களை அவரிடம் கொண்டு சென்றேன். அவற்றை நன்கு ஆய்வு செய்து கருத்துக்கள் கூறினார். அத்தியாவசிய விடயங்கள் குறித்து அவராகவே சிந்தித்து முடிவெடுக்கும் திறனுடன் இருக்கிறார்" என்று கார்டினல் ஜோசப் கூறினார். (து)

# ஜார்கண்டில் கடைசி நேர திருப்பம்


## சிபு சோரன் முதல்வரானார்



ஜார்க்கண்ட் மாநிலத்தில் கடைசிநேர திருப்பமாக புதிய முதல்வராக சிபுசோரன் பதவி யேற்றுக்கொண்டார். அவர் 21 ஆம் திகதிக்குள் மெஜாரிட்டியை நிரூபிக்க நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

ஜார்க்கண்ட் மாநிலத்தில் கடைசி நேரத்தில் அதிரடி திருப்பம் ஏற்பட்டது. புதிய முதல்வராக சிபுசோரனுக்கு கவர்னர் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார்.

கவர்னின் செயலைக் கண்டித்து மாநிலம் முழுவதும் பாரதிய ஜனதாக்கட்சித் தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பில் நேற்று முன்தினம் ஹர்த்தால் நடைபெற்றது. ஜனாதிபதியிடம் வாஜ்பாய், அத்வாணி ஆகிய இருவரும் நேரில் புகார்செய்தனர். ஜார்க்கண்ட் மாநில சட்டசபைத் தேர்தலில் எந்தக் கட்சிக்கும் மெஜாரிட்டி கிடைக்காததால் எந்தக் கட்சி பதவியேற்பது என்பதில் இழுபறிநிலை ஏற்பட்டது. சிபுசோரன் முதல்வர் பதவியை ஏற்றதால் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும். (து)



படத்தில் நீங்கள் பார்க்கும் பந்து கின்னஸ் சாதனைக்காக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 2704 வைரக் கற்கள் பதிக்கப்பட்டு, 18கரட் தங்கத்தில் தயாரிக்கப்பட்ட இந்தப் பந்தை கொழும்பில் உள்ள 'புளூ டைமண்ட் இன்டர்நேஷனல்' என்ற நிறுவனம் தயாரித்துள்ளது.

# குஜராத் மதக்கலவரத்தை தடுக்க

## வாஜ்பாய் தவறிவிட்டார்

### முன்னாள் குடியரசுத் தலைவர் கண்டனம்

குஜராத் வன்முறையைத் தடுக்க அப்போதைய பிரதமர் வாஜபாய் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்று முன்னாள் குடியரசுத் தலைவர் கே.ஆர்.நாராயணன் குற்றம்சாட்டியுள்ளார்.

குஜராத் கோத்ரா ரயில் எரிப்புச் சம்பவத்துக்குப் பின் ஏற்பட்ட கலவரத்தைத் தடுக்க, அப்போதைய பிரதமர் வாஜ்பாய் கடுமையான நடவடிக்கை எடுக்கவில்லை. கலவரத்தைத் தடுக்கும்படி பலமுறை அவருக்குக் கடிதம் எழுதினேன்; நேரிலும் பேசினேன. கலவரத்தை ஒடுக்க குஜராத்துக்கு இராணுவத்தை அனுப்பும்படி கூறினேன். இராணுவத்தையும் அனுப்பினார்கள்.

ஆனால், கலவரத்தில் ஈடுபட்டவர்களைக் கண்டதும் சுட உத்தரவிடவில்லை. அந்த உத்தரவைப் பிறப்பித்திருந்தால், பல படுகொலைகள் தடுக்கப்பட்டிருக்கும் தொடர்ந்து வன்முறைகள் நடந்தது தடுக்கப்பட்டிருக்கும். மத்திய, மாநில அரசுகள் அதைச் செய்யவில்லை.

குஜராத் கலவரத்தின் பினனணியில் மத்திய மற்றும் மாநில அரசுகளின் சதி இருந்தது என நாராயணன் 'மானவா சமஸ்கிருத்தி' என்ற பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்திருக்கிறார். (து)

# சதாம் வழக்கை விசாரித்த

## நீதிபதி சுட்டுக் கொலை

ஈராக்கில் சதாம் உசேன் வழக்கை விசாரித்துவரும் சிறப்பு தீர்ப்பாயத்தின் நீதிபதி அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

ஈராக்கில் சதாம் ஆட்சி வீழ்ந்த பின் கார்க்குண்டு வெடிப்புகள் தினசரி நிகழ்ச்சியாகிவிட்டன.

அமெரிக்காவுக்கு ஆதரவாகசெயல்படும் கவனர்கள், நீதிபதிகள் போன்றவர்களைச் சுட்டுத்தள்ளுவது சதாம் ஆதரவு கொரில்லாக்களின் வாடிக்கையாகிவிட்டது.

இதற்கிடையே, சதாம் மீதான வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு தீர்ப்பாயத்தின் மூத்த நீதிபதியான பராவிஸ் முகமது, அவரது மகன் மற்றும் ஒரு வக்கீல் ஆகியோர் அதாமியா மாவட்டத்தில் உள்ள நதிபதியின் வீட்டில் நேற்று அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர். (து)

# வடமராட்சி கிழக்கிற்கான இடமாற்றத்தை

## ஆறு கிராமசேவை அலுவலர்கள் பகிஷ்கரிப்பு

### இடமாற்ற உத்தரவை பரிசீலிக்குமாறும் கோரிக்கை

வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு இடமாற்றஞ் செய்யப்பட்ட பிரதேசத்தை 2 கிராமசேவகர்களும், கரவெட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 2 கிராம சேவகர்களும், சாவகச்சேரி பிரதேசத்தைச் சேர்ந்த 2 கிராமசேவகர்களும் மொத்தம் 6 கிராம அலுவலகர்கள் இன்னமும் தம்து கடமைகளைப் பொறுப்பேற்கவில்லை.

மேற்படி கிராம அலுவலர்கள் தமது இடமாற்றமானது பாரபட்சமாக மேற்கொள்ளப்பட்டதாகவும், தம்மில் சிலர் ஏற்கனவே எட்டு வருடங்களாக வடமராட்சி கிழக்கில் கடமையாற்றியுள்ளதாகவும் ஆதலால் மண்டும் தம்மை கட்டாயப்படுத்தி இடமாற்றுவது மனிதாபிமான மற்றது என்பதால் தாம் இதுவரை கடமையைப் பொறுப்பேற்கவில்லையெனவும் தெரிவித்ததுடன் தமது இடமாற்றத்தை இரத்துச் செய்யும வரை தாம் சுகவீன விடுமுறையிலே இருக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்கள்.

இதேவேளை, வடமராட்சி கிழக்குப் பகுதியில் குடியிருக்கும் கிராம அலுவலர் சிலர், தமது பகுதிகளில் பணிபுரிய நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களை அப்பகுதிக்கு கடமையாற்ற நியமிப்பது மிகவும் பொருத்தமுடையது எனவும் பாதிக்கப்பட்ட கிராம அலுவலர்களால் சுட்டிக காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் தமது தற்காலிக இடமாற்றத்தை மீளாய்வு செய்யுமாறு அரச அதிபரைக் கேட்டுக்கொண்டுள ளனர். (ப-101)

## துயரத்தின்..

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

எல்லாரையும் கொண்டிபோய் காம்பில் வைச்சுத்தான் உண்மையைச் சொல்ல வைப்பம்"

"அவர் இங்க வாறதே இல்ல. வேற எந்த உண்மையைச் சொல்ல?" என்று கேட்டாள் மைதிலி.

"ஏய் என்ன நீ கனக்கக் கதைக்கிறது? எல்லாம் ஜீப்பில் ஏறுங்க! அங்க போனா உண்மை தானா வெளியில வரும்" என்று ஒருவன் மைதிலியை ஜீப்புக்குத் தள்ளிக் கொண்டு போனான். மற்றவன் மீனாட்சியையும் மகளையும் இழுத்துக்கொண்டு போனான். சசி கதறிக்கொண்டு நின்றான். அவனைக் கொண்டு செல்லும் உத்தேசம் அவர்களுக்கு இல்லை. அவனைத் தனியே விட்டுப் போகிறோமே என்ற உணர்வும் அவர்களுக்கு இல்லை. மனிதர்களுக்குத்தானே இத்தகைய உணர்வு இருக்கும்.

மைதிலியை இழுத்துக் கொண்டு போனவன் அவளை உள்ளே தள்ளியபோது அவன் இடுப்புப் பட்டியில் தொங்க விடப்பட்டிருந்த கைக்குண்டு ஒன்று கழன்றதைக் கவனியாமல் ஜீப்பை எடுக்கும்படி கட்டளையிட்டான்.

சசி அழுதபடியே வாசல் வரை ஓடிவந்தான். ஜீப்பினுள் இருந்த இராணுவத்தினர் அட்டகாசமாகச் சிரித்தனர்.

"தீவிரவாதியின் மகன்" என சசியைச் சுட்டிக்காட்டிச் சிரித்தனர் இராணுவத்தினர்.

ஜீப் நகர்ந்துகொண்டிருந்தது. சசி அழுதுகொண்டே ஓடிவந்துகொண்டிருந்தான். ஜீப் வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. கீழே விழுந்து கிடந்த கைக்குண்டைக் கண்டதும் எடுத்து ஜீப்பை நோக்கி எறிந்தான் சசி.

மறுகணம் ஜீப் பூகம்பமாய்ச் சிதறியது.


சசி செய்வதறியாது அழுதுகொண்டிருந்தான்.



ஜார்கண்டில் சிபு சோரன் முதல்வராகப் பொறுப்பேற்றதற்கு எதிர்ப்புத் தெரிவித்து டில்லியில் பாரதிய ஜனதா ஆதரவாளர்கள் சோனியாவின் உருவபொம்மையை எரித்தனர்.

# நான் வேண்டாமென நிராகரித்ததாலேயே மஹிந்தவுக்கு பிரதமர் பதவி கிடைத்தது

## -அநுரா தெரிவிப்பு



பிரதமர் பதவியை ஏற்றுக் கொள்ளுமாறு ஜனாதிபதி என்னிடம கோரிக்கை விடுத்தார். நான்தான் வேண்டாமென்றேன். இதனாலேயே மஹிந்த ராஜபக்ஷவிற்குப் பிரதமர் பதவி கிடைத்தது எனத் தெரிவிக் கும அமைச்சர் அநுரா பண்டார நாயக்க, சுதந்திரக் கட்சி மத்திய குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி திட்ட வட்டமாக இதனைத் தெரிவித்திருந் ததாகவும் கூறியுள்ளார்.

கம்பஹாவில் இடம்பெற்ற மாகாண சபைகள், பிரதேச சபைகளின் உறுப் பினர்கள் கலந்துகொண்ட கூட்டத் தில் பேசும்போதே அமைச்சர் அநுரா பண்டாரநாயக்க மேற்கண்டவாறு தெரி வித்தார்.

தொடர்ந்து அமைச்சர் அநுரா அங்கு பேசுகையில்,

பிரதமராக என்னையே ஜனாதி பதி நியமிக்க முயன்றார். நீங்கள் ஜனாதிபதியாக இருக்கும் வரை அப்பதவி எனக்கு வேண்டாமென மறுத்துவிட்டேன். எனவேதான் அப் பதவி மகிந்த ராஜபக்ஷவிற்குக் கிடைத்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத் தில் ஜனாதிபதி நேரடியாக இத னைத் தெரிவித்தார் இப்பதவிக்கு உரித்துடையவர் அநுராதான் என்று.

நாட்டில் வேலையில்லாப் பிரச் சினையை நீக்கி வாழ்க்கைச் செல வைக் குறைத்து இனப்பிரச்சினைக் குத் தீர்வு காண்பதற்காகவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சி அமைக்கப்பட்டது. ஆனால் திடீரென வந்த கடல்கோளினால் தீர்க்கவேண் டிய பிரச்சினைகள் பன்மடங்காகி விட்டன. இந்நிலையில் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப ஜனாதிபதி பெரும் முயற்சிகளை மேற்கொணடு வருகிறார். இதனைத் தடுத்து ஐ.தே கட்சியின் தேவையை நிறைவேற்ற ஒரு சிலர் திட்டங்களை முன்னெ டுத்து வருகின்றனர்.

ஜனாதிபதியை மாற்றி பண் டாரநாயக்கர்களை ஓரங்கட்டவே திட் டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின் றன.

தனியார் அச்சு ஊடகங்களும், இலத்திரனியல் ஊடகங்களும் வஷ மப் பிரசாரங்களை மேற்கொணடு வரு கின்றன. இதற்கு ரணில் விக்கிரம சிங்கவே ஆலோசனைகளை வழங்கி வருகிறார்.

எமது கட்சியின் தலைவரை தனியார் ஊடகங்களால் தீர்மானிக்க முடியாது. அதேபோல், ஐ.தே.கட்சி யின் தலைமையை அரச ஊடகங்க ளாலும் தீர்மானிக்கமுடியாது என் றார். (ற)

## அவசர கலந்துரையாடல்

உடற்கல்வி ஆசிரியர் நியமனம் கிடைத்த மற்றும் கிடைக்காத உடற்கல்வி டிப்ளோமாதாரிகளை இன்று நடைபெறும் கலந்துரையா டலில் கலந்துகொள்ளும்படி கேட்டுக கொள்ளப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடல் காலை 11.00 மணிக்கு நீராவியடி பிறைற் மன் கல்வி நிலையத்தில் நடை பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ப)

## சர்வதேச சந்தை வாய்ப்பு

(கொழும்பு)

நவீன தொழில்நுட்ப தொழில் துறை அபிவிருத்தி அமைச்சர் ரோகித போகெல்லாகம உள்ளூர் வர்த்தகர் கள் சர்வதேச சந்தைவாய்ப்பைப் பெறுவதற்கு இயன்றவசதிகள் செய்து கொடுக்கப்படும் என்று தெரிவித் துள்ளார்.

இதற்கு ஏற்றுமதி அபிவிருத்தி சபையும் அதன் பங்களிப்பை செலுத் தும் என்றார்.

இந்தக் கூட்டத்தில் ஏற்று மதியாளர்கள் எதிர்நோக்கும் பிரச் சினைகள் பற்றியும் ஆராயப்பட்டது. (க-9)

## 3 தமிழ் இளைஞர்கள் விளக்க மறியலில்!

(அனுராதபுரம்)

அனுராதபுரத்திலுள்ள இராணுவ முன்னணி காவல் நிலையில் சர ணடைந்ததாகக் கூறப்படும் 3 தமிழ் இளைஞர்களை எதிர்வரும் 16 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கு மாறு புல்மோட்டை நீதிபதி அமல் ரண வீர உத்தரவிட்டுள்ளளார்.

உடப்புசல்லாவையைச் சேர்ந்த ராமலிங்கம் கலைக்குமார், கிண் ணியா ஈச்சந்தீவைச் சேர்ந்த முத் துராஜா ஜெகதீசன், தோப்பூரைச் சேர்ந்த மாரிமுத்து அழகன் ஆகிய இளைஞர்களே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த இளைஞர்கள் தொடர் பான விபரங்களை அவர்களது பெற் றோருக்கு அறிவித்து எதிர்வரும் 16ஆம் திகதி நீதிமன்றத்திற்கு அழைக்குமாறும் பொலிசாருக்கு நீதி பதி உத்தரவிட்டுள்ளார். (ற)

## உயர்தர மாணவர்களுக்கு 2 பாடங்கள் போதுமானவை

### பல்கலை பேராசிரியர்கள் கருத்து

(கொழும்பு)

பல்வேறுதரப்பட்ட சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கு ஏதுவாக புதிய கல்விமுறைமை கொண்டுவரப்படு வது அவசியம் என்று பல்கலைக் கழக பேராசிரியர் கூட்டமைப்பின் உறுப்பினரான நில்ஸ்ரீ ஜெயத்திலக்க தெரிவித்துள்ளார்.

இந்தக் கல்வி சீர்திருத்தங்கள் பரந்தமுறையில் மேற்கொள்ளப் பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத் தியுள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட் டில் கலந்துகொண்டு பேசுகையி லேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசு கையில்,

உயர்தர வகுப்பில் பாடங் களின் எண்ணிக்கை விரிவான பாடத் திட்டத்தின் கீழ் இரண்டாகக் குறைக் கப்பட வேண்டும். கொழும்பு பல் கலைக்கழகத்தின் பேராசிரியர் தர்ம வர்த்தன கருத்து தெரிவிக்கையில்,

பலகலைக்கழகங்களுக்கு மாண வர்களை சேர்த்துக்கொள்வதில் முறை கேடுகள் இடம்பெற வாய்ப்பு உண்டு என்று தெரிவித்தார்.

கூட்டமைப்பின் தலைவர் பேராசிரி யர் சந்தன அபயரத்தின சகல சமூகத் தவர்களையும் உள்ளடக்கிய கூட்டு கட்டமைப்பு ஒன்றின் அவசியம் பற்றி வலியுறுத்தினார். (க-9)

## ஊடக அமைச்சுக்கு மர்மப் பொதி!

ஊடகத்துறை அமைச்சுக்கு நேற்றுமுன்தினம் தபாலில் வந் துள்ள சந்தேகத்திற்கிடமான துகள் கள் அடங்கிய பார்சல் நேற்று முன்தினம் மருத்துவ ஆராய்ச்சிப் பிரிவினரால் பரிசோதனைக்குட் படுத்தப்படவிருந்தது.

அமைச்சு அதிகாரிகளிட மிருந்து இப் பார்சலைப் பெற்றுக் கொண்டுள்ள கிருலப்பனை பொலி ஸார் இதனை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்துக்குக் கையளித்துள்ள தாகக் கிருலப்பனைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித் தார். (க-9)

## சட்டவிரோதமான முறையில் மலேசியாவில் தங்கியிருந்த வெளிநாட்டவர்கள் கைது!

(கொழும்பு)

மலேசிய அரசாங்கம் அந்த நாட் டில் சட்டவிரோதமாகத் தங்கியி ருந்த பெரும் எண்ணிக்கையானோரை கைதுசெய்துள்ளது.

சட்டவிரோதமாக குடியேறிய வர்களுக்கு நாட்டைவிட்டு வெளி யேறுவதற்கு வழங்கப்பட்ட பொது மன்னிப்பு காலம் முடிவடைந்ததை யடுத்தே இவர்கள் கைதுசெய்யப் பட்டனர்.

சட்டவிரோதமாக மலேசியாவில் தங்கியுள்ளவர்களை இரவுவேளை களில் சுற்றிவளைத்து கைதுசெய் வதற்கென மலேசிய அரசாங்கம் விசேட நடவடிக்கை குழு ஒன்றை யும் நியமித்துள்ளது.

இதேவேளை 5 லட்சத்துக்கும் மேற்பட்டவர்கள் மலேசியாவில் சட்ட விரோதமாக குடியேறியுள்ளனர் என அந்நாட்டு ஊடகம் ஒன்று தகவல்

## போஷாக்கு உணவு

கொற்றாவத்தை பூமகள் முன் பளளி சிறுவர்களுக்கு போஷாக்குள்ள உணவு வழங்கப்பட்டு வருகின்றது.

இந்தப் போஷாக்குணவினை செல்வச்சந்நிதி ஆலய ஆச்சிரமத் தின் மதிப்புக்குரிய மோகன் ஐயா வழங்கி வருகின்றார். (ப-106)

## யாழ்.குடாநாட்டு விவசாயிகளின் நிலைமை பரிதாபம்

# உள்ளீடுகள் தட்டுப்பாட்டின் காரணமாக உப உணவுப் பயிர்ச் செய்கை பாதிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உப உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடு படும் விவசாயிகளுக்குத் தேவை யான விதை வகைகள் இல்லா மையினால் விவசாயிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

மாவட்டத்தில் நெல் அறுவடை பூர்த்தியடைந்த நிலையில், வயல்க ளில் உப உணவுகளான பயறு, உழுந்து, கௌப்பி, எள்ளு, குரக் கன், போன்றவற்றினைத் தமது விளை நிலங்களில் பயிரிட விவ சாயிகள் ஆர்வம் கொண்டுள்ள போ திலும் கூட, முளைத்திறன் கொண்ட விதைகள் இல்லாமல் இருப்பதால் உப உணவுப் பயிர்ச்செய்கையில் ஈடுபடாமல் விவசாயிகள் இருந்து வருகின்றனர்.

இதேசமயம், விவசாயிகளுக் குத் தேவையான மேற்படி உப உணவுப் பயிர்ச்செய்கைக்கான விதை களைப் பெறுவதற்கு விவசாயிகள் அலைந்துதிரிகின்றபோதும் விவசாயி களுக்குரிய உள்ளீடுகளை விநியோ கிக்கும் கமநல சேவை நிலையங் களிலும் கூட, இத்தகைய உள்ளீடு கள் இல்லாமல இருப்பது குறித்து விவசாயிகள் பெரும் கவலைகொண் டுள்ளனர்.

அதேசமயம், வயல் நிலங்களில தற்போது இருக்கக்கூடிய ஈரலிப்புத் தன்மை, தற்போதைய கடும வெய் யில் காரணமாக விரைவில் மாறி விடக்கூடிய ஏதுநிலை காணப்படுவ தால், இவவருடம் மாவட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட அளவு உப உண வுப் பயிர்ச்செய்கை இடம்பெறமாட் டாதெனவும் விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், மாவட்டத்திலுள்ள தனியார் கடைகளில் இருக்கக் கூடிய பயறு, உழுந்து, கௌப்பி, எள்ளு, குரக்கன போன்றவை விவ சாயத் தேவைக்கு உரியவையாகக் காணப் படவில்லை எனவும் அறி யப்படுகின்றது. (ப-16)

## மத்திய போக்குவரத்துசபை, கொத்தணி பஸ் நிறுவன ஊழியர்களின் எண்ணிக்கையை குறைத்து

# மீண்டும் இ.போ.சபை நிறுவ நடவடிக்கை

(கொழும்பு)

மத்திய போக்குவரத்துச்சபை மற்றும் கொத்தணி பஸ் நிறுவனங் களில் கடமையாற்றும் ஊழியர்க ளின் எண்ணிக்கையைக் குறைத்து இலங்கை போக்குவரத்துச் சபையை மீண்டும் நிறுவப்போவதாகப் போக்கு வரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

தற்போது மேற்படி இரு நிறு வனங்களிலும் நாற்பதாயிரத்திற்கும் மேறபட்ட ஊழியர்கள் கடமையாற் றுவதாகவும் இந்த ஊழியர்களின் எணணிக்கை 25 ஆயிரமாகக் குறைக கப்படும் என்றும் அமைச்சர் குறிப் பிட்டார்.

போக்குவரத்து அமைச்சில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றின்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அமைச்சர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கும்போது,

கொத்தணி பஸ் கம்பனிக ளால் அரசாங்கத்திற்கு பாரிய நஷ் டமும், இழப்புக்களும் ஏற்பட்டுவரு கின்றன.

இங்கு கடமையாற்றும் ஊழி யர்களின் எண்ணிக்கையும் குறிப் பிட்ட தொகைக்கு அதிகமாகவே உள்ளது.

எனவே தொடர்ந்தும் அரச போக்குவரத்துச் சேவைகளை நஷ் டத்தில் இயங்கச்செய்யாமல் இருப் பதற்காகவே ஊழியர்களின் எண் ணிக்கையைக் குறைத்து இலங்கை போக்குவரத்து சபையை மீண்டும் நிறுவ நடவடிக்கை எடுத்துள்ளேன்.

தனது சுயவிருப்பத்தின்பேரில சேவையிலிருந்து நீங்கிக்கொள்ளும ஒவ்வொரு ஊழியருக்கும் ஓய்வூதி யம் பெற்றுச்செல்லும் திட்டத்தின் கீழ் நியாயமான நஷ்டஈட்டுத் தொகையொன்று வழங்கப்படும்.

இதுதொடர்பாக தற்போது ஆலோசனை நடாத்தப்பட்டு வரு கிறது.

நாட்டில் தற்போது நான்கா யிரம் அரசசேவை பஸ்கள் சேவை யில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

ஆனால் 40 ஆயிரம் ஊழியர்கள சேவைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். இந்த நிலைமையில் அரச போக்கு வரத்துத் துறையை ஒருபோதும் முன்னேற்றமுடியாது.

பஸ்சேவை கால அட்டவணை யின் பிரகாரம் நாட்டில் ஏழாயிரம் பஸ்வண்டிகள் சேவைக்குத் தேவைப் படுகின்றன.

இந்த இலக்கை அடைந்து நாட்டுக்கு சிறந்த அரச போக்குவரத் துச் சேவையை வழங்குவதே எனது இலட்சியமாகும் என அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார். (க-9)

## சுனாமியால் சேதமடைந்த 246 வழிபாட்டுத் தலங்களை நோர்வே அரசு புனரமைக்கும்

(கொழும்பு)

சுனாமி அனர்த்தம் காரணமாகச் சேதமடைநதுள்ள இந்து, கிறிஸ்தவ, பௌத்த, இஸ்லாமிய மத வழிபாட் டுத் தலங்களைப் புனரமைத்துக் கொடுப்பதற்கு நோர்வே அரசு தயாரா கவே உள்ளது என நோர்வே நாட் டின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

மதங்களுக்கிடையிலான சமாதான அமைப்பு மற்றும் யுத்த விரோத முன்னணி ஆகியவற்றின் பிரதி நிதிகளுடன் இடம்பெற்ற சந்திப்பின போதே சொல்ஹெய்ம் மேற்கொண் டவாறு உறுதியளித்துள்ளார்.

இதேவேளை, சுனாமியால் சேத மடைந்த பல வணக்க ஸ்தலங் களையும் மேற்படி அமைப்புக்களின வேண்டுகோளின் பிரகாரம் சொல் ஹெய்ம் நேரில் சென்று பார்வை யிட்டார். இவ்வணக்க ஸ்தலங்களை இந்நாட்டு அரசாங்கத்தின் ஊடாக தமது நாடு புனரமைக்கும் என்றும் அதற்கான சகல ஏற்பாடுகளும் செய் யப்பட்டுள்ளன எனவும் சொல்ஹெய்ம மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சுனாமி அனர்த் தத்தினால் 192 பௌத்த விகாரை களும், 54 கிறிஸ்தவ, இந்து, இஸ் லாமிய வழிபாட்டுத்தலங்களும் அழிந் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின் றது. (க)

### வெள்ளி நற்சிந்தனை

# மனம் ஒருமித்த இறைவழிபாடு நிலையான இன்பம் தரும்



உலகில் தெய்வ நம்பிக்கையுள்ளவர்களும் தினமும் வழிபாடுகள் செய்பவர்களும் தாங்கள் மிகவும் சோதனைகளுக்கும் துன்பங்களுக்கும் ஆளாவதாகக் கவலைப்படுவதை அன்றாட வாழ்வில் நாம் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் அத்துன்பங்களுக்கும், சோதனைகளுக்கும் காரணம் உள்ளன்புடனும் ஒருமித்த மன நிலையுடனும் இறைவழிபாடு செய்யாமையே என்பதை நாம் சிந்திப்பதில்லை.

இறைவழிபாட்டில் மனம் ஒருமித்த நிலையினராக இருந்த பல ஆன்மீக ஞானிகளின் வாழ்க்கை இதனை எமக்கு நன்கு எடுத்துக் காட்டுவதாக உள்ளது. பழைய புராணங்கள், இதிகாசங்கள், ஆகம நூல்கள் வழிபாட்டின் மனப் பக்குவத்தைப் பற்றிப் பலவாறாக ஆழ்ந்து, சிந்தித்து, நாம் அனுபவிக்கக் கூடிய விதத்தில் அழகாக எடுத்துக் கூறியுள்ளன.

மேலும் நாயன்மார்களால் அருளப்பட்ட திருமுறைகள், திருப்புகழ், திருமந்திரம், அறுபத்து மூவர் திருவிளையாடற்புராணம், பகவத்கீதை, இராமாயணம், மகாபாரதம் மற்றும் கந்தபுராணம், திருவாதவூர்ப்புராணம் போன்ற பல் வேறு நூல்களும் ஆங்காங்கே இறைவழிபாட்டின் மனமொருமித்த நிலையின் அவசியம் பற்றியும் மனமொருமித்த வழிபாடின்மையால் ஏற்படக்கூடிய துன்ப விளைவுகள் பற்றியும், அனுபவபூர்வமாக எடுத்து விளக்குவனவாயுள்ளன.

திருமுறைகளில் அப்பர் சுவாமிகள் மிக அழகாகவும் தெளிவாகவும்,

"மனமெனும் தோணிபற்றி மதி எனும் கோலை ஊன்றிச் சினமெனும் சரக்கை ஏற்றிச் செறி கடல் ஓடும்போது மதனெனும் பாறை தாக்கி மரியும் போதறிய ஒண்ணாது உனை உன்னும் உணர்வை நல்காய்"

என உலகியல் வாழ்விற்கிடந்து உழலும் நாம், இறைவனைத் துன்பம் வந்து சூழ்ந்த போதே மனம் ஒருமித்த நிலையில் உள்ளத்தில் எண்ணுகின்றோம் என்பதை எடுத்துக் கூறியுள்ளார்.

மேலும் இந்துசமய இறை வழிபாட்டியலிற் சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நால்வழிகளிலும் இறைவழிபாடுகளை மனம் ஒருமித்து இயற்றலாம் என்பதை நாயன்மார் நால்வரும் சிறப்பாக உணரவைத்துள்ளார்கள்.

சரியைத் தொண்டின் மூலம் அப்பர் சுவாமிகளாகிய திருநாவுக்கரசு நாயனார் ஆண்டான் அடிமை எனவும், கிரியைத்தொண்டின் மூலம் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தந்தை, மகன் எனவும், யோக மார்க்கத்தின் மூலம் சுந்தரமூர்த்தி நாயனார் தோழமையாகவும் ஞானமார்க்கத்தின் மூலம் மாணிக்கவாசக சுவாமிகள் தானே சிவமாகவும் மனமொருமித்த இறைவழிபாட்டின் மேன்மையை அனுபவபூர்வமாகத் தாமே அனுபவித்து நாமும் அனுபவிக்கும் விதமாக வழ்ந்து காட்டியுள்ளார்கள்.

மனமொருமித்த வழிபாட்டில் எம்மை நாமே எப்படி வழிப்படுத்தலாமென்பது,

"உள்ளமெனும் கூடத்தில் ஊக்கமெனும் தறிநிறுவி
உறுதியாகத் தள்ளரிய அன்பெனும் தொடர்பூட்டி இடைப்படுத்தித்

**நீர்வைமணி**

தறுகட்பாசக் கள்ளவினைப் பசுபோதக்
களித்துறைகு கருணை" கொண்டவராக

மனதைத் திடப்படுத்தினால் இறைவழிபாட்டில் தெய்வீக அருளைப்பெறலாம் என்பது நன்கு உணர்த்தப்படுவதாயுள்ளது.

எனவே நாமும் மனமொருமித்த நிலையில் இறைவழிபாடுகளில் ஈடுபடுதல் மூலம் வாழ்வியலில் எத் துன்பங்களையும் வென்று நல்வாழ்வு வாழலாம் என்பதில் ஐயமில்லை. □

# தாயகம் திரும்புவோர்களுக்கான புதிய மீள்குடியேற்றக் கிராமம்

(கொழும்பு)

மன்னார் மாவட்டத்தில் இருந்து இந்தியா சென்று மீண்டும் தாயகம் திரும்புபவர்களுக்கான புதிய மீள்குடியேற்றக் கிராமம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

தலைமன்னார் பிரதான வீதியில் அமைந்துள்ள "செல்வாரி" என்னும் இடத்தில் இந்த மீள்குடியேற்றக் கிராமம் உருவாக்கப்படவுள்ளது.

இதற்கமைய செல்வாரி பிரதேசத்தில் உள்ள அரச காணிகள் புனரமைக்கப்பட்டு வீதி, மலசல கூடவசதி, கிணறுகள் என்பன அமைக்கப்பட்டு தற்காலிக வீடுகளில் 50 குடும்பங்கள் வரை குடியமர்த்தப்பட்டுள்ளன. (க-61)

# மெய்வன்மைப் போட்டி

(சுண்டுக்குளி)

யாழ்.பாசையூர் சென் அன்ரனிஸ் றோ.க.மகளிர் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி கடந்த 26 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு சென். அன்ரனிஸ் விளையாட்டுக்கழக மைதானத்தில், வித்தியாலய அதிபர் திருமதி சி.செல்வநாயகம் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம், யாழ்.உதைபந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் ஆகியவற்றின் தலைவர் "நடுநிலைச் செம்மல்" கப்ரின் குணசிங்கம், சிறப்பு விருந்தினராக பாசையூர் புனித அந் தோனியார் ஆலய பங்குத்தந்தை அருட்திரு ஆர்.ஸ்ரலின், கௌரவ விருந் தினராக திருக்குடும்ப கன்னியர் மட தலைவி அருட் சகோதரி மேரி பாஸ்கர் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-110)

★ ★ ★

(யாழ்ப்பாணம்)

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி மைானத்தில் அதிபர் நா.வன்னியசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக வண்ணை நாவலர் மகா வித்தியாலய அதிபர் ந.சிவராஜா, கொட்டடி நமசிவாய வித்தியாலய அதிபர் எஸ்.நடராஜலிங்கம், நாவாந்துறை றோ.க.வித்தியாலய அதிபர் ஜீ.செபஸ்ரியாம்பிள்ளை, சன்மார்க்க வித்தியாலய அதிபர் சி.மாணிக்கராசா, ஒஸ்மானியாக் கல்லூரி அதிபர் எம்.எஸ். ஏ.எம்.முபாறக் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-9)

# எழுத்துப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

அரச கருமமொழிகள் திணைக் களத்தின் அனுசரணையுடன் வடக்கு கிழக்கு மாகாண முகாமைத் துவ அபிவிருத்தி பயிற்சித் திணைக் களத்தினால், அரசாங்க உத்தியோ கத்தர்களுக்காக நடாத்தப்பட்ட அடிப்படை ஆங்கிலம், சிங்களம் பயிற்சி நெறிகள் தொடர்பான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ்.வேம்படி மகளிர் உயர் தரக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப் பரீட்சைக்கான அனுமதி அட்டையை யாழ்ப்பாணம் பிராந்திய ஆணையாளர் அலுவலகத்தில் எதிர்வரும் 7ஆம் திகதி தொடக்கம் பெற்றுக்கொள்ளலாம் என பிராந்திய ஆணையாளர் அறிவித்துள்ளார். (ச)

# மின்பிறப்பாக்கிகள் மாயம்; உயர் அதிகாரி கைது

(திருகோணமலை)

கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளுக்கென் வழங்கப்பட்ட 12 பிறப்பாக்கிகள் காணாமல் போன சம்பவம் தொடர்பாக உயர் அரச அதிகாரியொருவர் நேற்றுமுன்தினம் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடல் பேரலைகளினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கு வழங்கும் பொருட்டு இந்தியா, சீனா ஆகிய நாடுகளிடமிருந்து இந்த மின்பிறப்பாக்கிகள் கிடைக்கப்பெற்றன.

திருகோணமலை மாவட்ட செயலாளருக்கு அனுப்பப்பட்ட இந்த மின்பிறப்பாக்கிகள் பாதுகாப்பின் பொருட்டு காணி ஆணையாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த போதே காணாமல் போயிருந்தன.

இந்தச் சம்பவம் தொடர்பாக காணி ஆணையாளர் அலுவலகத்தைச் சேர்ந்த அலுவலக உதவியாளரும் காவலாளி ஒருவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ற-8)

# வடமராட்சியில் சேதமடைந்த பாடசாலைகளை புனரமைக்க சுவீடன் அரசு முன்வருகை

(மருதங்கேணி)

வடமராட்சிப் பகுதியில் சுனாமி அனர்த்தங்களால் சேதமடைந்த பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்வதற்கான உதவிகளை வழங்க சுவீடன் அரசு முன்வந்துள்ளது.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வி மேம்பாடுகளைக் கவனத்தில் கொண்டே இவ் உதவிகளை வழங்க சுவீடன் அரசு முன்வந்துள்ளது.

இதன் அடிப்படையில், வடமராட்சி கரையோரங்களிலிருந்து 100 மீற்றர் தூரத்திற்குட்பட்ட பகுதிகளில் இருக்கும் பாடசாலைகளை இடமாற்றி பாதுகாப்பான இடங்களில் நிறுவுவது பற்றியும் கவனம் செலுத்தப்படவுள்ளது. (ற-35)

# வடக்கில் அபிவிருத்தியை மேற்கொள்ள கிளி. இல் பொறியியல் அலுவலகம்

(கொழும்பு)

வடபகுதியில் அபிவிருத்தி நடவடிக்கையை மேற்கொள்ளும் வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் புதிதாக பிரதான பொறியியல் அலுவலகம் ஒன்றைத் திறப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வடபகுதியில் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதில் உள்ள சிரமங்களை நீக்கும் வகையிலேயே இந்த அலுவலகம் திறக்கப்பட இருப்பதாகத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-9)

# சுனாமியால் பாதிக்கப்பட்ட வட-கிழக்கில் நீர், மண்வளத்தை பரிசோதிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

(திருகோணமலை)

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்கு- கிழக்குப் பிரதேசங்களில் கிணற்று நீரையும் மண்வளத்தையும் பரிசோதிப்பதற்கான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

குடிநீர்ப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதோடு கமத்தொழில்களுக்குப் பொருத்தமான காணிகளைத் தெரிவு செய்வது இந்த முயற்சிகளின் நோக்கமாகும் என மாகாண விவசாயப் பணிப்பாளர் கலாநிதி எஸ்.ஞானச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

உலக உணவு விவசாய ஸ்தாபனம் பெற்றுக்கொடுத்த உபகாரணங்களைப் பயன்படுத்தி 3 வகையான சோதனைகளை நடத்தி வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த அமைப்பு மேலும் சில உபகரணங்களைப் பெற்றுக் கொடுக்க இணங்கியுள்ளது.

அவற்றைப் பயன்படுத்தி யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் இவ்வாறான சோதனைகள் நடாத்தப்படுமென கலாநிதி ஞானச்சந்திரன் மேலும் தெரிவித்தார். (ற-9)

# நெல்லியடி பொலிஸாரின் அதிரடியால் கோஷ்டி மோதல் தடுக்கப்பட்டுள்ளது

(துன்னாலை)

நெல்லியடிப் பகுதியில் நடைபெறவிருந்த கோஷ்டி மோதல் ஒன்று பொலிஸாரின் அதிரடி நடவடிக்கைகளால் தடுத்து நிறுத்தப்பட்டிருப்பதுடன் மோதலில் ஈடுபடத் தயாராக இருந்த கோஷ்டிகளைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

துன்னாலை, கரவெட்டிப்பகுதி இளைஞர்களும் கரணவாய் மூத்த விநாயகர் கோவில், உடுப்பிட்டி இளைஞர்களும் இரு கோஷ்டிகளாக நெல்லியடிப் பகுதியில் வாள்கள், கொட்டன்களுடன் மோதலுக்குத் தயாரான வேளை நெல்லியடிப் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று இரு குழுக்களையும் மடக்கிப் பிடிக்க முற்பட்ட போது கொட்டன்களைப் போட்டுவிட்டுப் பலர் ஓடிவிட்டனர்.

எனினும் இக் குழுக்களைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்களை பொலிஸார் பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் முற்படுத்திய வேளை மாவட்ட நீதிபதி அரியநாயகம் வரும் 10 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் சம்பவத்தில் ஈடுபட்ட ஏனைய அனைவரையும் கைதுசெய்து நீதிமன்றில் முற்படுத்துமாறும் பொலிஸாருக்குக் கட்டளையிட்டார்.

இதேவேளை, மேற்படி இளைஞர் சார்பாக பிணை மனுக்கோரி விண்ணப்பித்த சட்டத்தரணியின் கோரிக்கையும் நீதிமன்றால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க இக் கோஷ்டி மோதலில் ஈடுபடவிருந்த குழுக்களில் ஒரு பகுதியினரை வடமராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர் இன்பனும் அலுவலகத்தில் தடுத்து வைத்துள்ளார். இதனால் பாரிய ஓர் கோஷ்டி மோதல் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளது.

குடாநாட்டில் தற்போது வீதிகளில் தேவையற்று நின்று பெண்களுடன் சேட்டைவிடும் இளைஞர் கும்பல்களின் அடாவடித்தனங்கள் அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ப-101)

### கண் நோயாளர் அவதி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பொது வைத்தியசாலையில் கண் சிகிச்சைப் பிரிவு இல்லாததால் கண் சம்பந்தமான நோயாளர் பெரும் அவதிகளுக்குள்ளாக வேண்டிய நிலையிலுள்ளது. இதனால் பொது மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். (ப)

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

தொடர் இல 42



மாலை நிழல் தொடக்கத்தில் ஒரு முழம் நீளம் இருக்கும் பொழுது இறங்க இறங்க நிழல் நீண்டுகொண்டே போகும். அதுபோல் பெரியோர்களின் நடபு தொடக்கத்தில் சிறிதாக இருக்கும். நாளாக நாளாக நட்பு பெருகி விசுவரூபம் எடுக்கும். இந்த அநுபவத்தை நான் மலாயாவில் அதிகம் கண்டேன். இந்தியாவிலும் சிலர் இப்படி இருக்கின்றார்கள்.

இந்தமுறை மலாயா பிரயாணத்தை 35 நாளில் விரைவாக முடித்துக்கொண்டு தாயகம் திரும்பினேன். தாயகத்தில் வள்ளி நாயகத்தின் திருவருளால் எனது விரிவுரைத்தொண்டு எப்பொழுதும்போல் ஓய்வின்றி நிகழத் தொடங்கியது.

## இமாலய யாத்திரை

உலகிலே யாத்திரை இருவகைப்படும். ஒன்று ஜீவ யாத்திரை. மற்றொன்று சிவயாத்திரை. உயிர்கள் இடையறாது எப்போதும் தப்பாது இரவு பகலாக யாத்திரை செய்துகொண்டுதான் இருக்கின்றன.

பயணம் புரிவோர் மாட்டுவண்டி, குதிரை வண்டி, புகை வண்டி, கார், விமானம் முதலிய பலவகையான வாகனங்களில் ஏறிச் செல்வார்கள். அதுபோல் உயிர்களும் பாம்பு, பல்லி, அட்டை, அரணை, மான், மீன், யானை, பூனை, புலி, எலி, வானரம், மனிதன், தேவன் என்ற பலவகையான உடம்புகளில் புகுந்து பேராற்றலுடைய இறையருளால் யாத்திரை புரிகின்றன. இந்த யாத்திரை என்று தொடங்கியது என்று எவராலும் உறுதிசெய்ய முடியாது. "என்று நீ அன்று நான்" என்கிறார் தாயுமானார்.

ஆதி கன்மத்தால் உடம்பெடுத்து உடம்பினால் ஈட்டும் நல்வினை தீவினைக்கு ஏற்ப உயிர்கள் பன்னெடுங்காலமாக வேறு வேறு உடம்புகளை எடுத்து, பிறந்தும் இறந்தும் மாறி மாறிப் பயணம் புரிகின்றன.

இந்த உடம்பில் உயிரை ஏற்றி விடுகின்ற அதிகாரி பிரமதேவர். இறக்கி விடுகின்ற அதிகாரி அறக்கடவுள். இந்தப் பிரயாணக் குறிப்புகளை அவரவர் கரங்களில் சுருக்கெழுத்தால் (ரேகை) எழுதியுள்ளது.

"அப்படி ஏழுமேலும் வகுத்துவழாது போதினில்
அக்ரம்வியோம கோளகை மிசைவாழும்
அரூரதேவி கோவின் விதிப்படி மாறி மாறி அ
கைத்துரு வாய காயம தடைவேகொண்
டிப்படி யோனிவாய் தொறும் உற்பவியா விழா உல
கிற்றடு மாறியே திரீ தருகாலம்
எத்தனை ஊழிகாலமெ னத்தெரியாது வாழி இ
னிப் பிறவாது நீயருள் புரிவாயே"

என்று இந்த சீவ யாத்திரையை முடிக்கவேண்டும் என்று அருணகிரிநாத சுவாமிகள் ஆறுமுகப் பெருமானிடம் முறையிடுகின்றார்.

## இருவகை யாத்திரை

உலகத்தோடு ஒட்டிவாழ்வது சீவ யாத்திரை. சிவபெருமானை நோக்கிச்செய்யும் யாத்திரை சிவயாத்திரை எப்படும். சீவயாத்திரை துன்பத்தைத் தருவது. சீவயாத்திரைக்கு முற்றுப்புள்ளி வைத்து அழியாத இன்பத்தைத் தருவது சிவயாத்திரை.

## எங்குந் துன்பம்

உலக முழுவதும் சுற்றிப் பார்த்தால் யாண்டும் துன்பந்தான் காணப்படுகிறது. ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வகையான துன்பம். அரசனுக்கும் மேலும் மேலும் நாட்டை விசாலப்படுத்துவதிலும் பகையரசராலுந் துன்பம். பெருந்தன வந்தனுக்குப் பிள்ளையில்லை என்ற துன்பம். வறியவனுக்கு நிரம்பக் குழந்தைகள் பிறந்து உணவு தேடுந்துன்பம். பெண்பெற்றவனுக்கு மணமகனைத் தேடுந்துன்பம். மாப்பிள்ளை நற்குணனாக அமையாத துன்பம் பிள்ளை பெற்றவனுக்கு அம்மகன் நன்கு கல்வி பயில வேண்டும் என்ற துன்பம். கல்வி பயின்றபின் மகனுக்கு வேலை தேடுவதில் துன்பம். வேலை தேடியபின் வேலை உயர்வு குறித்துத் துன்பம். மகனுடைய திருமணங் குறித்தும் பலவகையான துன்பம். மருமகள் குணவதியாக அமையாத துன்பம். நிலபுலம் உள்ளவனுக்கு நீர் வியாதி வந்து அரிசியன்னம் உண்ண முடியாத துன்பம். மனைவி குணக்கேடாக அமைந்து துன்பம். எனவே இங்ஙனம் உலக முழுவதும் ஒவ்வொருவரும் ஒவ்வொரு வகையில் துன்பத்தை நுகர்கின்றார்கள்.

## இன்பம்

ஒருவர் மட்டும் " இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என்று இடி முழக்கம் போல் முழங்கி மொழிகின்றார். இவர் எப்படித் துன்பத்தை வென்றார்? என்று சிந்தித்து, அவரைப் போல் நாமும் அல்லலை அகற்றுதல் அறிவுடமையாகும்.

கடலுக்கு நடுவே கப்பல் மிதக்கின்றது. ஆனால் கப்பலுக்குள் கடல் நுழையக்கூடாது. கார் மீது நாம் ஏறுதல் வேண்டும். நம்மீது கார் ஏறக்கூடாது. அதுபோல் உலகத்தில் நாம் இருக்க வேண்டும். நம்மிடம் உலகம் இருகக்கூடாது. நம்முடைய உள்ளத்தில் ஞான பண்டிதனாகிய மாலுமி இருக்க வேண்டும்.

## துன்பம் துடைக்கும் வழி

துன்பத்துக்குக் காரணம் அறியாமை. இன்பத்துக்குக் காரணம் அறிவு. ஆதலால் ஞானிகள் துன்புறுவதில்லை. "ஞானிக்கில்லை இன்பமுந் துன்பமும்" என்று நறுந்தொகை நவில்கின்றது.

எனவே நாம் துன்பத்தைத் துடைக்க வேண்டுமானால் ஞானத்தைப் பெற வேண்டும். ஞானத்தைப் பெறுவதற்கு மூன்று வழிகள் உண்டு.

1 ஞானிகளோடு தொடர்பு கொள்ளுதல்.
2. ஞான நூல்களை ஓதுதல்.
3. புண்ணிய நதிகளில் ஆடி, புண்ணியத் தலங்களைத் தரிசித்தல்.

இந்த முறையில் தல யாத்திரை நமக்கு ஞானத்தைத் தருகின்றது. தல யாத்திரை புரியும் போது பல்வேறு மனிதர்களுடன் பழகும் வாய்ப்பு கிட்டுவதால் உலக அனுபவமும் கிடைக்கின்றது. பசி தாகங்களைப் பொறுத்துக்கொள்ளுகின்ற சகிப்புத்தன்மையும் எய்துகின்றது. பெருந்தனவந்தர்கள் வீட்டில் இருந்தால் மணி தவறாமல் உண்டு உறங்குவர். அவர்கட்குப் பசி தாகம் இன்னதென்றே தெரிய வழியில்லை. யாத்திரையில் கையில் பணமிருக்கும். பையில் பண்டமிருக்கும். பசியாற்றிக்கொள்ள முடியாத நிலை ஏற்படும். அப்போது பசியின் அருமையை அறிய முடிகின்றது. பசியின் துயரை அறிந்தால் வறியவரின் பசியை அகற்றுங் கருணை பிறக்கின்றது. இனி யாத்திரையால் பல மொழிகளை யுணரும் இன்றியமையாத ஒரு நிலைமையுங் கிடைக்கின்றது. பல வகையான புதிய புதிய காட்சிகளும் காணக்கிடைக்கின்றன.

(தொடரும்)

# மில்ரோய் பெர்னாண்டோவின் மனைவி உட்பட நால்வருக்கு மரணதண்டனை

(கொழும்பு)

கத்தோலிக்க விவகாரம் மற்றும் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சர் மில்ரோய் பெர்னாண்டோவின் மனைவி உட்பட 4 பேருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்துள்ளது.

01.06.1991ற்கும் 01.01.1992ற்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் வெனண்புவவைச் சேர்ந்த சார்ளட் திரேசா பெரணாணடோ மற்றும் எட்வின் சீலாவதி ஆகிய இரண்டு பெண்களை கடத்திச் சென்று கொலை செய்ததாக இவர்கள் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த கொலை தொடர்பான வழக்குவிசாரணையை மேற்கொண்ட கொழும்பு மேல்நீதிமன்றம், 4 ஜூரர்களின் ஏகமனதான தீர்மானத்தின் பேரில் எதிரிகளான குறிப்பிட்ட 4 பேரையும் குற்றவாளியாகக் கண்டு இந்தத் தீர்ப்பை நேற்று முன்தினம் வழங்கியது.

அமைச்சரின் மனைவியான ஜூலியட் மொனிக்கா பெர்னாண்டோ, அஜித பிரியங்கர பெரேரா, நெவில ரோகன பீரிஸ் மற்றும் சுகத் கிரிசாந்த ஆகிய நால்வருக்குமே இந்த மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது. (ற)

# வெற்றி

வேலணை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட போட்டி புங்குடுதீவு சிவலைப்பிட்டி அம்பாள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 19 கழகங்கள் பங்குபற்றின இதில் புங்குடுதீவு சிவலைப்பிட்டி அம்பாள் விளையாட்டுக் கழகமும் புங்குடுதீவு கத்தோலிக்க விளையாட்டுக்கழகமும் இறுதியாட்டத்துக்கு தெரிவுசெய்யப்பட்டு 3:2 என்ற கோல் கணக்கில் புங்குடுதீவு கத்தோலிக்க விளையாட்டுக் கழகம் வென்றது. (ப-126)

# கைதான சந்தேக நபருக்கு 16 வரை விளக்கமறியல்!

அம்பாறை மாவட்டம் தம்பட்டையில் இடம்பெற்ற பெண் போராளிகள் மீதான துப்பாக்கிச் சூட்டு சமபவம தொடர்பாக சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ள நபர், எதிர்வரும் 16 ஆம் திகதிவரை நீதிமன்ற உத்தரவின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளான மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட மகளிர் அரசியல் துறை பொறுப்பாளர் குவேனி, துணை பொறுப்பாளர் சசிமதி மற்றும் அகநிலா ஆகியோர் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாகவே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு பெரியகல்லாற்றைச் சேர்ந்த ஜோண்சன் ஜெயகாந்தன் (வயது 28) என்ற நபர் கடந்த செவ்வாய்க்கிழமை விடுதலைப் புலிகளின் கல்முனை பிரதேச அரசியல்துறை பொறுப்பாளர் வின்சன்ட் கொடுத்த தகவலொன்றின் பேரில் கார்மேல் பற்றிமா கல்லூரி சுனாமி அகதிமுகாமில் கடமையிலிருந்த விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு கல்முனை பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார்.

குறிப்பிட்ட நபர் நேற்று முன்தினம் மாலை பொலிஸ் விசாரணையின் பின்பு கல்முனை மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி கே.தட்சணாமூர்த்தி முன்னிலையில் ஆஜர் படுத்தப்பட்ட போது, எதிர் வரும் 13 ஆம் திகதி அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் அடையாள அணி வகுப்பு நடைபெறும் என்பதால் அந்த அடையாள அணி வகுப்பில் இவரை ஆஜர்படுத்துமாறும், அது வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

பலத்த பாதுகாப்புடன் நீதிமன்றத்திற்கு மூடிய வாகனமொன்றில் பொலிஸாரால் அழைத்து வரப்பட்ட இவர் அங்கிருந்து மீண்டும் பொலிஸாரால் அதேபோன்று அழைத்துச் செல்லப்பட்டார். இவரை மொனராகலை சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிபதி தனது உத்தரவில் குறிப்பிட்டுள்ளார்.

அக்கரைப்பற்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட வேண்டிய இவர் பாதுகாப்புக் காரணங்களுக்காக அங்கு கொண்டு செல்லப்படாமல் அந்த நீதிமன்றத்தின் உத்தரவை அமுல்படுத்துவதற்காக கல்முனை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ற)

# "உங்கள் ஆண்டவராகிய கடவுள் எனக்குச் செவிசாயுங்கள்"



## தவக்காலச் சிந்தனை

அன்பைத்தான் எல்லா மதங்களும் போதிக்கின்றன. தந்தை இறைவன் ஒவ்வொரு மனிதரையும் அன்பு செய்கிறார். தன் சொந்த மகன் இயேசுவை அன்பு செய்வது போல மனிதரை அன்பு செய்கிறார் (யோவா 15:9). இந்த அன்பைப் பெறும் மனிதர் இதற்குப் பதில் அன்பைக் காட்ட வேண்டும். பழைய ஏற்பாட்டில் கடவுளை அன்பு செய்ய வேண்டும். என்பது முதன்மையான கட்டளை. புதிய ஏற்பாட்டிலே பெரிய கட்டளை எது எனக் கேட்கப் படுகின்றது. இதற்கு ஒரு புதியதொரு பரிமாணத்தை இயேசு கொடுக்கிறார். அதாவது "தன்னிடம் அன்பு கூர்வது போல உன் அடுத்திருப்பவனிடமும் அன்பு கூறுவதே எரிபலிகளையும், வேறு பலிகளையும் விட மெலானது" என்றார். அதாவது கடவுள் அன்பு என்பது மனிதரை அன்பு செய்வ தாகும். இயேசு மனிதருக்கு உணவு, உடை, உறைவிடம் கொடுத்தவர்களைப் பார்த்து சின்னஞ்சிறிய எனது சகோதரர்களுக்குச் செய்தபோதெல்லாம் எனக்குச் செய்தீர்கள் என்கிறார். மேலும் யோவான் நற்செய்தியில் குறிப்பிடும்போது "நீங்கள் ஒருவர் மற்றவருக்கு அன்பு காட்டுங்கள்" என்கிறார். (யோ 13:35). பவுலடியார் இயேசுவைப் புரிந்துகொண்டு "அயலான் மீது அன்புகாட்ட வேண்டும் என்ற கட்டளையில் எல்லாம் அடஙகியுள்ளன" (உரோ 13:9) என்றார். நல்ல சமாரியன் உவமையும் மனித அன்பையே மையப்படுத்துகின்றது. நீரும் போய் அவ்வாறே செய்யும் (லூக் 10:37) என்கிறார். ஆகவே இறைவன் அன்பு செய்வது என்பது பிறரை அன்பு செய்வது, பகைவரை அன்பு செய்வது, பிறருக்கு வாழ்வு கொடுப்பது.

காவலன்

மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கீழல்லார் கீழல் லவர். - குறள்

வலம்புரி

## யாழ். மருத்துவபீட மாணவர்களுக்கு ஓர் அன்புமடல்!

அன்புசால் மருத்துவபீட மாணவர்களுக்கு அநேக வணக்கங்கள். நீண்டகாலமாக உங்களோடு கடிதப் பரிமாற்றம் செய்யவேண்டும் என்ற அவா இருந்தும் இன்றுதான் அது சாத்தியப்பட்டுள்ளது.

எனினும் நான் எழுதுகின்ற அன்புமடல் உங்களுக்கு ஆத்திரத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தலாம். ஆயினும் நீங்கள் மருத்துவபீட மாணவர்கள் என்பதால், சமகாலத்தில் உலகளாவியரீதியில் உச்சம்பெற்றுள்ள உளவியல், சீரமியம் போன்ற "மனித மனஉணர்வுகள்" பற்றிய எண்ணக்கருக்களை நன்கு அறிந்திருப்பீர்கள் என்ற வகையில் இக்கடிதத்தைத் துணிவோடு எழுதுகின்றேன்.

இப்பகுதியில் உங்களுக்கு எழுதப்படுகின்ற கடிதம், பத்திரிகையியல் என்ற நடைமுறைகளை சற்று விலக்கிவைத்துவிட்டே எழுதப்படுகின்றது.

காலத்துக்காலம் நடைமுறைமாற்றங்கள் ஏற்படுவது தேவையானதும், தவிர்க்கமுடியாததும் என்ற நிலைப்பாட்டில் இக்கடிதம் எழுதுவதில் ஓர் திருப்தியும் எனக்குள் உண்டு.

அவ்வகையில் அண்மையில் இப்பத்தியில் எழுதப்பட்ட யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடத்தில் ராக்கிங் என்ற கருத்தியல் தங்களுக்கு எம்மீது ஆத்திரத்தை ஏற்படுத்தியிருக்கலாம். அவ்வாறு ஏற்படுவது மனித வழமையே. ஆகையால் அதுபற்றி அதிகம் இங்கு குறிப்பிடவில்லை.

எனினும், "ராக்கிங்" என்ற நோய் தங்களின் பீடத்தில் உடனடியாகக் கட்டுப்படுத்தப்பட்டமைக்கு நன்றிகள் கூறவிரும்புகின்றேன்.

அதேநேரம் நேற்றுமுன்தினம் நீங்கள் திருநெல்வேலிச்சந்தியில் நடத்திய ஆர்ப்பாட்டம் குறித்தே இக்கடிதத்தை எழுதுகின்றேன்.

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்துகின்றார்கள் என்றவுடன் ஊடகங்கள் அதிக அக்கறைகொண்டமை உண்மையே. ஆர்ப்பாட்டத்திற்கான காரணத்தை அறிய முற்பட்டபோதே உங்களின் ஆர்ப்பாட்டம் எதற்காக என்ற உண்மை தெரியவந்தது.

ஆர்ப்பாட்டங்கள், தொழிற்சங்கப் போராட்டங்கள் மலிந்துபோயுள்ள இந்த நாட்டில் நீங்களும் சேர்ந்துகொண்டீர்களாக்கும் என்று நிலைமையை விளங்கிக்கொள்ளாமல் போனவர்கள் அநேகர்கள்.

ஆனால் உங்களின் போராட்டம் தனியார் மருத்துவக் கல்லூரி அமைப்பதற்கு எதிரானது என்ற செய்தியை அறிந்ததும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்காத மாணவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

தரப்படுத்தல் என்ற வரையறையை மீறி படிப்பதற்கு ஆர்வமுள்ளவர்களுக்கு பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களே தடையாக இருக்கின்றார்கள் என்ற உண்மை கடந்த காலங்களில் - சில வேளைகளில் வெளிப்பட்டிருந்தபோதும் இப்போது அது பூரணமாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

ஒரு புள்ளி அல்லது இரண்டு புள்ளிகள் போதாது என்பதற்காக பல்கலைக்கழக அனுமதியைப் பறிகொடுத்த மாணவர்கள் ஏராளம். உண்மையில் பல்கலைக்கழகம் சென்ற மாணவர்களைவிட இவர்கள் பன்முகப் பார்வைகொண்ட அறிவுப் புலத்தை உடையவர்களாக இருக்கலாம்.

எனினும் அந்த வெட்டுப்புள்ளிக்குள் இவர்களின் பெயர்களும் இடம்பெறுவதற்கு அரசின் தாராளத்தன்மை வக்கிரமடைந்துவிட்டது.

இவ்வாறு வெட்டுப்புள்ளிகளால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு தனியார் மருத்துவக் கல்லூரிகள் ஒரு வாய்ப்பாக அமையலாம் அல்லவா? தனியார் மருத்துவக் கல்லூரியில் கற்பதற்கான செலவுகளை நீங்கள் கணக்கீடு செய்தமை நியாயமானதே. ஆனால் மக்களின் வரிப்பணத்தில் கற்கும் நீங்கள் மட்டும் பட்டம் பெற்றதும் உங்களின் மண்ணை - மக்களை மருத்துவபீடத்தை மறந்துவிட்டு விமானம் ஏறிப்போகிறீர்களே! ஏன்? எதற்காக?

தனியார் மருத்துவக் கல்லூரிகளில் கற்கின்றவர்களாவது நமக்காக மிஞ்சுவார்கள் அல்லவா? இந்த ஆவல் நம் மக்களிடம் இருக்கவே செய்கின்றது என்பதை தங்களுக்கு அறியத்தருகின்றேன்.

நன்றி.

# இடைக்கால நிர்வாகத்திற்கு இணங்கினால் அரசைக் கவிழ்ப்பது தவிர்க்க முடியாதது

## ஜே.வி.பி தலைவர் சோமவன்ஸ எச்சரிக்கை

(கொழும்பு)

**பொதுக்கட்டமைப்புககோ அல்லது இடைக்கால நிர்வாகத்துக்கோ அரசாங்கம் இணஙகினால் அரசாங்கத்தைக் கவிழ்ப்பது தவிர்க்க முடியாதது என ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க தெரிவித்துள்ளார்.**

ரொய்ட்டர் செய்தி நிறுவனத்துக்கு நேற்றுமுன்தினம் வழங்கிய விஷேட செவ்வியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

விடுதலைப்புலிகள் சுனாமி அனர்த்த நிவாரண நிதியையோ அல்லது இடைக்கால நிர்வாக அதிகாரங்களையோ கையாள எந்த அதிகாரமும் அற்றவர்கள்.

விடுதலைப்புலிகள் ஆயுதங்களை வைத்துக் கொண்டு அரசியல் நீரோட்டத்துக்கு வரமுடியும். ஆனால் விடுதலைப் புலிகளை மக்கள் பிரதிநிதிகள் எனக் கூறிக் கொள்ளும் தமிழ் மக்களை மனம் திறந்து பேச அவர்கள் அனுமதிக்க வேண்டும்.

இந்த நிலையில், விடுதலைப்புலிகள் வடக்கு-கிழக்கில் ஜனநாயத்தை ஏற்படுத்துவதற் கான பேச்சுக்கே இணங்க வேண்டும். விடுதலைப்புலிகள் வடக்கு-கிழக்கில் ஒரு கட்சி ஆட்சிமுறையை ஏற்படுத்த முனைகிறார்கள். அதற்கு ஒரு போதும் இடமளிக்கக் கூடாது.



அத்துடன், ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண நிதியைப் பயனபடுத்துவதற்கான பொதுக் கட்டமைப்பையோ அல்லது இடைக்காலத் தன்னாட்சி அமைப்பையோ அரசு ஏற்படுத்த முனையுமானால் அரசில் இருந்து வெளியேறி அரசைக் கவிழ்க்க உள் ளோம் எனவும் அவர் மேலும தெரிவித்தார். (ந-4)

# சுண்டுக்குளியில் வீடுடைத்துத் திருட்டு 5 இலட்சத்து 45ஆயிரம் ரூபா இழப்பு

## பணம், நகைகள் என் பெருமளவில் அபகரிக்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

இரவு நேரத்தில் வீடொன்றை உடைத்து உள்சென்று 5 இலடசத்து 45ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்கள், பணம், நகைகள் களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் சென்ற மாதம் 26ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணிக்கு சுண்டுக்குளியில் நடைபெற்றது.

இதில் 1இலட்சத்து 20 ஆயிரம் பெறுமதியான 11 பவுண நிறையுடைய தாலிக்கொடி ஒன்றும் 96 ஆயிரம் ரூபா பெறுமதியான 12 பவுண் நிறையுடைய 3 சோடி காப்புகளும் 60 ஆயிரம் ரூபா பெறுமதியான கல்லு வைக்கப்பட்ட அட்டியல் ஒன்று 1இலட்சத்து 80 ஆயிரம் ரூபா பெறுமதியான 15 பவுண் நிறையுடைய பதக்கம் சங்கிலியும் 60 ஆயிரம் பெறுமதியான 5 பவுண் கொண்ட 2 மோதிரம் 3ஆயிரம் ரூபா பெறுமதியான பெண்கள் அணியும் கைக்கடிகாரம், ஆயிரம் ரூபா பெறுமதியான 200 அமெரிக்க டொலர் நோட்டுகளும் 16 ஆயிரம் ரூபா பணமாகவும் களவாடப்பட்டுள்ளதாக வீட்டு உரிமையாளர் யாழ்.பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். தனது கணவன் வெளிநாட்டில் இருந்து வந்து சென்ற பறகே களவாடப்பட்டதாக முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளனர்.

இம் முறைப்பாடு தொடர்பாக நேற்று முன்தினம் யாழ். பொலிஸார் யாழ்.மாவட்ட நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பித்துள்ளார்கள். (ப-19)

## கனடாவிலிருந்து வந்து சாவ. வைத்தியசாலையில் பணியாற்றிய

# நரம்பியல் வைத்திய நிபுணர்களுக்கு பலதரப்பினரும் பாராட்டுத் தெரிவிப்பு

(சாவகச்சேரி)

தமது ஓய்வு நாட்களில் எமது மண்ணின் மக்களுக்குச் சேவையாற்றவென வந்திருக்கும் நரம்பியல் வைத்திய நிபுணர்கள் நிரந்தர சமாதானம் ஏற்படும்போது நிரந்தரமாக இம் மண்ணில் சேவையாற்றுவார்கள் என நம்புகிறேன் என்று தென்மராட்சி அரசியல்துறைப் பொறுப்பாளர்ஈஸ்வரன் தெரிவித்தார்.

கனடாவில் இருந்து வந்து சாவகச்சேரி வைத்தியசாலை நரம்பியல் சம்பந்தமான நோய்களுக்குள்ளானோருக்கு வைத்திய ஆலோசனைகளை வழங்கிய நரம்பியல் வைத்திய நிபுணர்களான எ.முகுந்தன், திருமதி சோதிமலர் முகுந்தன் ஆகியோருக்கு வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத் தலைவர் கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற தேநீர் விருந்துபசார விழாவில் உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வைத்திய அதிகாரி மயிலேறும்பெருமாள் தனதுரையில், வைத்திய சமூகத்தவர்கள் நோயாளர்களுடன் ஒரே குடுமபத்தவர் போல் அன்புடன் பழகி தமது சேவையை நல்க வேண்டும். ஒரே குடும்பமாக நோயாளரும் வைத்திய சமூகத்தினரும் பழகும்போது வைத்தியசாலையின் வளர்ச்சிக்கு நோயாளர்கள் தமது வெளிநாட்டில் உள்ள உறவினர் மூலம் தமது உதவிகளை வழங்குவார்கள்.

மக்களின் உதவியுடன் வைத்தியசாலையை வளர்க்க வேணடும். பிரேதப் பரிசோதனை நடத்துவதில் பல இடர்களை இவ் வைத்தியசாலை அடைவதாக அறிகிறேன்.

எந்த நேரமானாலும் தொலைபேசியில் அழைத்தால் உடன் வந்து மரண விசாரணைக்கு பிரதே பரிசோதனை செய்து உதவத் தயாராக உள்ளேன் என்று தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ் அங்கு உரையாற்றுகையில், மாவட்ட நீதியரசர் பாலசுப்பிரமணியம் மற்றும் வைத்திய அதிகாரி மயிலேறும்பெருமாள் ஆகியோர் நரம்பியல் வைத்திய நிபுணர்களது சேவையை எமது மண்ணில் நடாத்த ஏற்பாடு செய்து தந்தமைக்கும் மக்களுக்கு தமது நற்சேவைகளை வழங்கிய நிபுணர் தம்பதிகளுக்கும் யாழ். மாவட்ட மக்கள் சார்பில் நன்றி தெரிவித்தார்.

கிராமசேவகர் இராசரத்தினம், டாக்டர் அம்பிகைபாகன், அருளானந்தம் உட்பட மற்றும் பலரதும் பாராட்டுரைகளைத் தொடர்ந்து வைத்திய நிபுணர் திருமதி சோதிமலர் முகுந்தன் அங்கு உரையாற்றுகையில்,

எமது சேவையை விட கஷ்டங்கள், துன்பங்களுக்கு மத்தியிலும் மக்களுடன் மக்களாக இம் மண்ணில் நின்று எமது மக்களுக்கு சேவையாற்றிய உங்களது சேவையே சிறந்த சேவையாகும்.

உங்கள் அளப்பரிய சேவைக்கு தலைவணங்குகிறோம். அழிநத கட்டடங்களை பார்வையிட்ட நாம் வைத்தியசாலையின் தேவைகளையும் கேட்டறிந்து கொண்டோம். நாடு திருமபியதும் அங்குள்ள வைத்தியர்களை ஒன்றுகூட்டி இங்கு தேவையான உதவிகளைச் செய்வதற்கு உரிய ஒழுங்குகளை மேற்கொள்வோம் என்றார்.

வைத்தியசாலை அபிவிருத்திச் சங்கத்தின் சார்பில் பாராளுமனற உறுப்பினர் ந. ரவிராஜ், வர்த்தக சங்கத்தின் சார்பில் வர்த்தகர் பாலாவும் வைத்திய தம்பதிகளுக்கு நினைவுப் பரிசில்களை வழங்கி கௌரவித்தனர். (ந-29)

## கோமாரியில் வேல் தோன்றிய அதிசயம்

(மட்டக்களப்பு)


கோமாரிப் பகுதியில் இரண்டரை அடி உயரமான அழகிய வேல் ஒன்று தோன்றியுள்ளதாகவும் இதனைக் காண பெருமளவு மக்கள் தினந்தோறும் படையெடுத்த வண்ணம் உள்ளனர். என்றும கூறப்படுகின்றது. கோமாரி விசேட அதிரடிப்படையினரின் புதிய முகாமிற்கு அப்பால் உள்ள பாலம் ஒனறிற்கு அருகிலேயே இந்த வேல் தோன்றியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.ஐம்பொன்னாலான வேலின் பின்னால் தமிழ எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளதாகவும் ஆனால் அந்த எழுத்துக்கள் தெளிவில்லாமல் இருப்பதாகவும் அங்குள்ள மக்கள் கூறுகின்றனர். தற்போது வேலின் பாதப் பகுதியைச் சுற்றி சீமெந்து இட்டு மக்கள் வணங்கத்தொடங்கியுள்ளனர்.(க)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

**பலவீனமானவனால் ஒருபோதும் பகவானை அடைய முடியாது என்று சுருதி கூறுகிறது. நாம் கடவுளின் குழந்தை என்றால் நாமும் கடவுளைப் போன்ற வளர்ப்பு தான். ஆகவே அவர் பரிசுத்தமானவர் என்றால் நாமும் பரிசுத்தமானவர்கள் தான்.**

சுவாமி விவேகானந்தர்



அண்மையில் தென்னிலங்கைக்குச் சென்ற யாழ்.பல்கலைக்கழக ஊடகவளங்கள் மற்றும் பயிற்சி மையத்தின் இதழியல் டிப்ளோமா மாணவர்கள் பாராளுமன்றத்தில் பிரதமர் மகிந்தராஜபக்ஷவைச் சந்தித்தனர். இதன்போது பிரதமருடனும் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளேயுடனும் சேர்ந்து படம் எடுத்துக்கொண்டனர்.

இதன் போது ஜே.வி.பியைச் சேர்ந்த விமல்வீரவன்சவும் அதில் சேர்ந்துகொண்டார்.

# மீன்பிடியியல் டிப்ளோமாதாரிகள் மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறையீடு



(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் தமிழ்மொழி மூல பாடசாலைகளிற்கான ஆசிரியர் ஆட்சேர்ப்புக்கான நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியுள்ள போதிலும் தமக்கு இன்னமும் நியமனம் வழங்கப்படவில்லை என தெரிந்து மீன் பிடியியல் டிப்ளோமா 4ம் அணி மாணவர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிட்டுள்ளனர்.

இது தொடர்பாக விசாரணை அதிகாரி பெறோஸ்சிடம் பாதிக்கப்பட்டவர்கள் மகஜர் ஒன்றை கையளித்தனர். போதிய தகுதியற்றவர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ள போதிலும் தமக்கு இது வரை நியமனம வழங்கப்படவில்லை என அவர்கள் தமதுமனுவில் குறிப்பிட்டுள்ளனர். (ச)

# பாணின் விலையை அதிகரிக்க பேக்கரி உரிமையாளர் சங்கம் முடிவு

(கொழும்பு)

பாணின் விலையினை அதிகரிப்பதற்கு இலங்கை வெதுப்பகங்களின் உரிமையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது. கோதுமைமாவின விலை அதிகரிப்புக் காரணமாகவே பாணின விலையினை அதிகரிக்கவேண்டி ஏற்பட்டுள்ளதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது.

பாணின் விலையினை மாவட்ட ரீதியில் வெவ்வேறு விலைகளில் அதிகரிப்பதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக வெதுப்பக உரிமையாளர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

வெதுப்பக உரிமையாளர் சங்கம் நேற்று மாலைநடாத்திய பேச்சுவார்த்தையிலேயே இம் முடிபு எடுக்கப்பட்டுள்ளதாக வெதுப்பகங்களின் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் பராக்கிரம தயாநாயக்க தெரிவித்துள்ளார்.

வெதுப்பகங்களின் பெரும்பாலானவை பிறிமா நிறுவனத்தின் மாவினைப்பயன்படுத்தியே பாண் உற்பத்தியை செய்கின்றன. இதனால் மாவின் விலை அதிகரிப்புக்கேற்ப தற்காலிகமாக பாணின் விலையினை அதிகரிக்க வேண்டியுள்ளது.

இது ஒரு தற்காலிக விலை உயர்வு மட்டுமே. மாவின்விலையில் ஏற்பட்டுள்ள தளம்பல் நிலை சீர் செய்யப்பட்டதும் பாணிற்கு நிலையான விலை ஒன்று நிர்ணயிக்கப்படும் எனவும் பேக்கரி உரிமையாளர் சங்கத்தலைவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

## ஜே.வி.பியினர்...

பேச்சு நடத்தியுள்ளனர். விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.எழிலன் மாவட்டக்கண்காணிப்புக்குழுவிற்கு முறைப்பாடு செய்துள்ளார்.

இதனைத்தொடர்ந்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜெயந்த தனபாலவுடன் தொடர்புகொண்டு பேச்சு வார்த்தைநடாத்தியதாக கண்காணிப்புக் குழு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (த-4)

## விமான...

சென்றுவிட்டார்கள் என விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்துள்ளதாகவும் ஆனால் இவ்விடயத்தில் சந்தேகம் நிலவுவதால்தாம் நலன்புரி அமைச்சில் முறையிட்டுள்ளதாகவும் தொண்டர் அமைப்பின் பணிப்பாளர் ஒருவர் தெரிவித்தார். (த)

அடையாள அட்டை இழந்தவர்களுக்கு

# யாழ்ப்பாணத்தில் நடமாடும் சேவை

(யாழ்ப்பாணம்)

சுனாமிப் பேரலையினால் தேசிய அடையாள அட்டையை இழந்தவர்களுக்கு புதிய அடையாள அட்டையை வழங்குவதற்கான நடமாடும் சேவையொன்று நாளையும் நாளை மறுதினமும் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளதாக ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

சுனாமி அனர்த்தத்தினால் அடையாள அட்டையை இழந்த 35 ஆயிரம் பேருக்கு இதுவரை அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றும் ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (த-08)

## திருகோணமலையில்...

தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இது விடயம் தொடர்பாக பேரவையின் தலைவர் விக்னேஸ்வரனுக்கும் திருகோணமலை பிரதிப் பொலிஸ் மா அதிபர் நெவில்விஜயசிங்கவுக்கும் இடையில் நேற்று மாலை சந்திப்பொன்றும் இடம்பெற்றது.

இதன்போது இன்று நடைபெறவுள்ள ஹர்த்தாலை இரத்துச் செய்யுமாறு பொலிஸ் தரப்பினர் கேட்டுக்கொண்ட போதும் இதற்கு தமிழ் மக்கள் பேரவைத்தரப்பு இணங்கவில்லை.

விரும்பினால் நாம் அனுஷ்டிக்கும் ஹர்த்தாலுக்கு பாதுகாப்பு தாருங்கள் அல்லது ஒதுங்கி நின்று பாருங்கள் என்று தமிழ் பேரவைத்தரப்பு பொலிசாரை கேட்டுள்ளது. (த-104)

## தமிழ்ச்செல்வனின்...

விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளரின் மலையக விஜயத்தை இ.தொ.க. எதிர்ப்பதாக பத்திரிகைகளில் வெளியான செய்தி அப்பட்டமான ஒரு பொய்யாகும்.

இது தமது செல்வாக்கு சரிந்து போனவர்களுடைய செயலாகும். அவர்கள் தமது அரசியல் சுதந்திரங்களுக்காக மலையகத்தையும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசையும் பயன்படுத்த முனைகிறார்கள் எனவும் அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

தமிழ்ச்செல்வனைப் பொறுத்தவரை அவர் எமது இனத்தைச் சேர்ந்தவர். தமிழன் என்று மார்தட்டிச் சொல்லக் கூடிய ஒரு செயல் வீரனை மலையகத்திற்கு வருவதை தமிழராகிய நாங்கள் எதிர்க்க மாட்டோம்.

அத்துடன் அவர் இலங்கைப் பிரஜை அவர் எங்கு வேண்டுமானாலும் செல்லலாம். ஆனால் அவர் எங்களுடைய பிரதேசத்திற்கு வருவதால் நாங்கள் பெருமை கொள்ளவேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-04)

## மறியல் போராட்டம்...

போராட்டத்தை நடத்தினர். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்டு குறிப்பிட்ட பாடசாலைகளில் தங்கியுள்ள மக்களை வேறு இடங்களுக்கு மாற்றம் செய்து பாடசாலையை இயங்கச்செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரியே மறியல் போராட்டம் நடத்தப்பட்டது. இம்மறியல் போராட்டத்தில் மாணவர்களின் பெற்றோர் மற்றும் ஆசிரியர்களும் கலந்து கொண்டு தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

பாடசாலைகளுக்கு முன்பாக கூடிய மாணவர்கள், பெற்றோர் மற்றும் ஆசிரியர்களுடன் இணைந்து நகர பிரதான வீதிகள் வழியாக வாசக அட்டைகளை ஏந்தியவாறு பிரதேசசெயலக வாயிலை சென்றடைந்தனர்.

இந்த மறியல் போராட்டம் காரணமாக பிரதேச செயலகத்தினுள் ஊழியர்களோ பொதுமக்களோ எவரும் உள்ளே செல்ல முடியவில்லை. அரசாங்க அதிபர் வேல் முருகு சண்முகம், இராணுவக் கட்டளை அதிகாரி கேணல் லக்சிறீ அமரதுங்க, பிரதேச செயலாளர் என்.சிறீசங்கர் ஆகியோர் சம்பவ இடத்திற்குச் சென்று மாணவர்களுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இந்த பேச்சுவார்த்தையின் போது அதிகாரிகளுக்கும் பாடசாலை சமூகத்திற்கு மிடையில் முறுகல்நிலை ஏற்பட்டது.

இதேவேளை எதிர்வரும் 14 ஆம் திகதி பாடசாலைகள் இயங்கவைப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் பாடசாலையிலுள்ளோரை தற்காலிக குடியிருப்புகள் அடையாளம் காணப்பட்டுள்ள இடங்களுக்கு மாற்றப்படுவார்கள் என்றும் அதிகாரிகளினால் உறுதிமொழிகள் அளிக்கப்பட்டன. இதையடுத்து மாணவர்கள் போராட்டத்தைக் கைவிட்டு கலைந்து சென்றனர். (ச)

## மீள் குடியமர்வை...

இது தொடர்பான பத்திரிகையாளர் மகாநாடொன்று நேற்று வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசத்தில் நடைபெற்றது.

வலிகாமம் வடக்கு கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் மரியாதாஸ் பயஸ் லோகதாஸ் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் கலந்துகொண்டார். அங்கு கடற்றொழிலாளர் சமாசத் தலைவர் லோகதாஸ் கூறுகையில்,

வலிகாமம் வடக்கு மக்களை தொண்டமனாறு செலவச்சந்நிதி, கற்கோவளம், புனிதநகர், இடைக்காடு, கதிரிப்பாய் போன்ற இடங்களில் குடியமர்த்துவதற்கு அரசஅதிபரின் முடிபு எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கு நாம் ஒருபோதும் இணங்க மாட்டோம் எமது சொந்தஇடமான மான்பாய்ந்தவெளி, கீரிமலை, வளலாய்பாம்பீச் வரையான பகுதிகளில் மீளக் குடியமர அனுமதிப்பதுடன் தொழில் செய்வதற்கும் அனுமதிக்கவேண்டும்.

அவ்வாறு செய்யத்தவறும் பட்சத்தில் அரசுக்கு எதிராக பாரியஎதிர்ப்பு நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளவுள்ளோம். எமது ஆர்ப்பாட்டத்தினால் ஏற்படும் விளைவுகளுக்கு அரசேமுழுப் பொறுப்பையும ஏற்றுக் கொள்ளவேண்டும் எனவும் அவர்கள்கூறினர். (ச-43)















இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.